உ
சிவமயம்

# தில்லைக் கூத்தன் திருநடனம்



எஸ். ஆர். எஸ். தேவதாசன்

1999

உ

சிவமயம்

# தில்லைக் கூத்தன் திருநடனம்




**செ. தேவதாசன்**, B. A,, Dip. Ed., Dip. H. C.

முன்னாள்; காரைநகர் கொத்தணி நிர்வாக அதிபர்

உதவிக் கல்விப்பணிப்பாளர்,

தலைவர், காரைநகர் மணிவாசகர் சபை



**1999**

**விலை: ரூபா 60/-**

# சமர்ப்பணம்

அடியேன் எனது சிறுவயது முதல் ''ஈழத்துச் சிதம்பரம்'' எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோவிலில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்ற எம் பெருமானிடம் அல்லும் பகலும் அனவரதமும் துதித்து வணங்கிப் போற்றி வருகிறேன். இந்தப் பக்தி பரவச நிலையை ஏற்படுத்தியவர்கள் எனது அன்புப் பெற்றோர் ஆவர்.

1991 ஆம் ஆண்டு காரைநகர் மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து பல இடங்களிலும் வாழ்ந்து வந்தபோதும் ஈழத்துச் சிதம்பர அப்பனையும் அம்மையையும் நினைந்து நெக்கு உருகினேன். இதன் வெளிப்பாடாக 1995 ஆம் ஆண்டு ''வீரகேசரி'', ''தினகரன்'', ''தினக்குரல்'' பத்திரிகையில் சைவ சமயக் கட்டுரைகளை எழுதத் தொடங்கினேன். 1995 ஆம் ஆண்டு மார்கழி திருவாதிரை நாளில் ஈழத்துச் சிதம்பரத்தில் தில்லையம்பலவன் திருநடனம் ''என்னும் கட்டுரையை, முதலாவதாக ''வீரகேசரி'' ஞாயிறு வார இதழில் எழுதினேன். தில்லைக்கூத்தன் அடியேனுடைய அகக் கண்களுக்கு காட்சிகொடுத்தான். மெய்சிலிர்த்து புளகாங்கிதம் அடைந்தேன். பல சைவ சமயக் கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக் கின்றன. அவற்றையெல்லாம் தொகுத்து நூலாக வெளியீடு செய் வதற்கு பெருங்கருணை பெற்றேன்.

எங்களையெல்லாம் காத்து அருள்பாலிக்கின்ற அம்மை சிவகாம சுந்தரி சமேத நடராசப் பெருமான் திருப்பொற் பாதங்களில் சமர்ப்பணம் செய்து வணங்கி நிற்கிறேன். அடுத்து என்னை வளர்த்து ஆளாக்கி சிவநெறிகாட்டிய அன்புப் பெற்றோரையும் (S. R. S) வணங்கி அவர்களுக்கும் சமர்ப்பணம் செய்கிறேன். இந்நூல் வெளி வருவதற்கு உதவிகள் செய்த அன்பர்களுக்கும் மனமார்ந்த நன்றி யினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நூலைப் படித்து மெய்யடியார் கள் பயனடைய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

''பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடியாடி நைந்து ருகிநெக்கு நெக்கு
ஆட வேண்டும் நான் போற்றி''

—மாணிக்கவாசகப் பெருமான்

''என் கடன் பணிசெய்து கிடப்பதே''

—அப்பர் திருவாக்கு

''தேவ பவனம்''
காரைநகர்.
11-12-1999

செ. தேவதாசன்

# ஈழத்துச் சிதம்பரத்தில்
# தில்லையம்பலவன் திருநடனம்

கோயில் என்பது பொதுவாகக் கொள்ளுமிடத்து எல்லாத் தேவாலயங்களையும் குறிக்கும். சிறப்பாக கருதுங்கால் சைவர்களுக்கு சிதம்பரமும் வைணவர்களுக்கு ஸ்ரீரங்கமும் ஆகும். சைவர்கள் அவ்வாறு கொள்வதற்கு காரணம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் மேன்மையாக கருதப்படுவது சிதம்பரமே.

இத்தலமூர்த்தி ஓம் என்னும் பிரணவத்தின் வடிவாக நின்று நாதாந்தக் கூத்தாடும் நடராஜப் பெருமான். ஐந்தெழுத்துச் சொரூபியாக விளங்கும் பெருமானின் திருக்கூத்து படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் உணர்த்துகின்றது. கருணையே உருவான நடராஜப்பெருமான், அழகிய வடிவத்தில் சர்வலோகமும் தோன்றி மறைவதற்கு காரணமான ஞானாகாயமான திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் புரியும் கோவிலையுடைய சிறப்புப்பெற்றதாகும் சிதம்பரத்தலம்.

உலகம் தோன்றிய காலம் முதற்கொண்டே நடைபெறும் ஆனந்தத் தாண்டவத்தை, நடராஜப்பெருமான் அடியார் பொருட்டு இதயஸ்தானமான சிதம்பரத்தில் ஆடிக்காட்டி அருள்கிறார். பஞ்சபூத தலங்களில் ஆகாயத் தலமாக விளங்குவது சிதம்பரமே.

தமிழகத்தின் இதயக்கனியாகத் திகழும் தில்லைச் சிதம்பரம் போல் மூர்த்தி, தலம், தீர்த்தப் பெருமையுடன் முதன்மையும் கருணையும் பல சிறப்புகளும் கொண்டு அடியார்களால் ''ஈழத்துச் சிதம்பரம்'' என்று அழைக்கப்படும் காரைநகர் திண்ணபுரப்பதியில் அமைந்துள்ளது சிவன்கோவிலாகும். கோவில் அமைப்பு முறையிலும், திருவிழாக்கள் உற்சவங்கள், மார்கழித் திருவாதிரை விழா மற்றும் சிதம்பரத்தில் நிகழும் கிரியை மரபுகளைப் பின்பற்றும் பாரம்பரிய சிறப்புப் பெற்றது. இவ்வகையால் இத்தலத்திற்கு ஈழத்துச் சிதம்பரம் என்னும் சிறப்புப் பெயர் உரியதாயிற்று. இப் பழம்பெரும் ஆலயத்தில், எழுந்தருளியுள்ள மூலவர் அருள்மிகு சுந்தரேசுவரப் பெருமான் அம்பிகை அருள்மிகு சௌந்தராம்பிகை என்றும் திருநாமமிட்டு வாழ்த்தி வணங்கப் பெறுகின்றனர்.

ஈழத்துச் சிதம்பரத்திலுள்ள நடராசர் திருவுருவம் சிதம்பரத்தில் அமையப்பெற்றதுபோல் மிகவும் அற்புதமானது. வியாக்கிரபாத முனிவரும், பதஞ்சலி முனிவரும் இருமருங்கிலும் தொழுதேத்த

ஐம்பத்தியொரு சுடர்களைக் கொண்ட வட்டத் திருவாசியுடன் கூடியது. இவ்வாறான அமைப்பும் அழகும் பொருந்திய திரு வுருவம் இந்தியாவில் சிதம்பரத் தலத்தில் மாத்திரம் உண்டெனக் கோவில் வரலாற்றிலும் மூர்த்தி சிற்பக்கலை நுணுக்கங்களில் நிபுணத்துவ முள்ள மு. பாஸ்கர தொண்டமான் அவர்கள் 1963 ஆம் ஆண்டு ஈழத்துச் சிதம்பரத்தை தரிசிக்க வந்தபோது கூறியதுடன் ''கலை மகள்'' பத்திரிகையில் ஈழத்துச் சிதம்பரத்தின் சிவகாமி அம்பாள் சமேதராக அமைந்திருக்கும் நடராசமூர்த்தம் பற்றிக் கட்டுரை எழுதியிருந்தார். நடராசப்பெருமானின் பவளம் போலான மேனி யில் துலங்குவது பால் வெண்மைக்கொப்பான தூய வெண்ணீறு ஆகும். எல்லா உலகுக்கும் நானே தலைவன் என்ற பெருமிதத்துட னான குமிழ் சிரிப்பு கொவ்வைப்பழ நிறமான செவ்வாயில் காணப் படுகிறது. வலது கையில் உடுக்கை உள்ளது. இது தோற்றமாகிய படைத்தற்தொழிலை கூறிக்கொண்டு உள்ளது. அபய முத்திரை யானது அஞ்சேல் எனக் கூறிய வண்ணம் காத்தற்றொழிலைச் செய்கின்றது.

திருக்கரத்தில் உள்ள தீச் சுடரானது பஞ்சபூதங்களினாலும் மும்மலங்களினாலும் எழும் தீய சக்திகளைப் பொசுக்கிச் சாம்பல் ஆக்கும் அழித்தற்றொழிலைச் செய்கின்றது. ஊன்றிய திருவடியானது மறைத்தற்றொழிலைக் காட்டுகின்றது. தூக்கிய திருவடியானது அருளற்றொழிலை எடுத்தியம்புகின்றது. அங்கே அவரது திருமேனி யில் பஞ்சாட்சரம் நமசிவாய காணப்படுகிறது.

ஓம் என்னும் ஓங்காரப் பிரணவம் திருவாசியாக உள்ளது. திரு வாசியின் தீச்சுடர்கள் தீயவைகளை அழிக்கும் தத்துவத்தை எடுத் துக் காட்டுகின்றன. உலகின் சகல ஜீவராசிகளும் நடராசப் பெரு மானால் அனுக்கிரகிக்கப்படுகின்றன. அவரின் திருநடனமே உலகை இயக்குகின்றது. அவரின் ஆனந்ததாண்டவ நடனத்தால் பஞ்ச கிருத்தியங்களும் நிகழ்கின்றன.

நடராசப்பெருமான் அம்பிகையோடு தெற்கு நோக்கி வீற்றிருக் கிறார். யமன் தென்திசைக்கு அதிபதி என்றபடியால் தம்மை வந்த டையும் அடியார்களின் யம பயத்தை நீக்கும் தத்துவத்தை தென் முகக் கடவுளான நடராசப் பெருமான் கூறிக்கொண்டு வீற்றிருக் கின்றார்.

தென்னகத்தில் தலமகிமை பெற்று விளங்கும் சிதம்பரத்தில் நிகழும் கிரியை மரபுகளைப் பின்பற்றும் பாரம்பரிய முறையில் ஈழத் துச் சிதம்பரத்திலும் மார்கழித் திருவாதிரை திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். திருவாதிரைத் திருவிழா நடக்கின்ற பத்துத்

தினங்களிலும் பெருமானுக்கும் அம்பிகைக்கும் விசேட அபிடேகம், பூசை நடைபெற்ற பின் மணிவாசகப் பெருமானுக்கு பூசை நிகழும். அதன் பின் மணிவாசகப் பெருமானை கூத்த பிரான் சந்நிதிக்கு எழுந்தருளச் செய்து திருவெம்பாவை ஓதுவர். திருவெம்பாவைப் பாடல்களைப் பாடுபவர் மணிவாசகப் பெருமானாகப் போற்றப்படுகிறார். இதனால் அவருக்கு கோவில் பட்டு தலைப்பாகையாகக் கட்டப்பட்டு மாலை அணிவிக்கப்படுகிறது.

அதன் பின்பே அவர் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடுகின்றார். அதனைத் தொடர்ந்து வசந்தமண்டபத்தில் பூசை நடைபெற்று சுந்தரேசப் பெருமான் அம்பாள் சகிதம் பிள்ளையார், சுப்பிரமணியர் ஆகியோருடன் இரண்டாம் வீதி உலா வந்து அடியவர்களுக்கு காட்சி கொடுப்பார்கள். திருவெம்பாவை ஓதப்படும் ஒன்பதாம் நாளாகிய தேர்த்திருவிழாவன்று நடராசப்பெருமான் செவ்வந்திப் பூக்களினாலும், திருவாபரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டு ஆனந்தத் தாண்டவம் ஆடிக் கொண்டு சிவகாமசுந்தரி அம்பாளோடு உள்வீதியில் பக்தர்கள் புடைசூழ மேளவாத்தியங்கள் ஒலிக்க, திருமுறைகள் ஓதுவோர் பஜனை செய்துஉலா வரும் காட்சியைக் கண்டு மெய்யடியார்கள் உளமுருகி வழிபடுவார்கள்.

பின்னர் நடராசப்பெருமானும் ஏனைய பரிவாரமூர்த்திகளும் தேர்களில் ஆரோகணித்து மூன்றாம் வீதியிற் பவனி வரும் காட்சி பக்திமயமான அற்புத ஆனந்தக் காட்சியாகும். முதலாம் தேரில் பிள்ளையாரும், வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியரும், இரண்டாம் தேரில் பூரணை புட்கலை சமேத ஐயனாரும், மூன்றாம் தேரில் நடராசப் பெருமானும், நான்காந் தேரில் சிவகாமசுந்தரி அம்பாளும், ஐந்தாம் தேரில் மாணிக்கவாசகப் பெருமானும் எழுந்தருளி வீதிவலம் வருவார்கள்.

தேர்த்திருவிழாவன்று இரவு பதினெட்டு நாழிகையின் மேல் இருபத்துநான்கு நாழிகை வரையில் ஆதிரை அபிஷேகமும் அதன் மேல் சூரியோதயத்திற்கு முன் ஆருத்திரா தரிசனமும் நிகழும். மிகவும் சிறப்பாக நடைபெறும் அபிஷேகத்தையும் அதன் பின் நடைபெறும் ஆருத்திரா தரிசனத்தையும் கண்டுகளிக்க ஈழத்தின் நாற்றிசைகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான மெய்யன்பர்கள் ஈழத்துச் சிதம்பரத்துக்கு வருவார்கள்.

திருவாதிரை நாளாகிய பத்தாம் நாள் மாலை நடேசப் பெருமானுக்கும் சிவகாமசுந்தரி அம்பாளுக்கும் விசேட பூசை நடைபெற்று இரண்டாம் வீதியில் திருஉலா, திருவூடல், உள்வீதியில் தீர்த்தம்

ஆகியன நிகழும். திருவாதிரைத் திருவிழா நாளாகிய பத்து நாட்களும் பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காக விரதமிருந்து அங்கப்பிரதட்சணம் செய்வார்கள், காவடி எடுப்பார்கள்.

இக்காலத்தில் காரைநகர் மணிவாசகர் சபையினரால் ஈழத்துச் சிதம்பரத்தில் மணிவாசக விழா மிகச் சிறப்பாக நடத்தப்படும். இவ்விழாவில் ஈழத்தையும் தமிழ்நாட்டையும் சேர்ந்த அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவார்கள். மணிவாசகர் மடாலயத்திலும் சிவாச்சிரமத்திலும் அடியார்களுக்கு அன்னதானம் நடைபெறும்.

ஈழத்துச் சிதம்பரத்தில் திருநடனம் புரிகின்ற நடராசப் பெருமானைப் போற்றி வணங்குகையில் உள்ளத்தில் உவகையும் பக்தியும் பொங்குகிறது. மெய்சிலிர்க்கிறது. இங்கே முழங்கும் கோயில் மணியோசை இதயத்தை சிவலோகமாக்குகிறது. மூன்று வீதிகளிலும் நடைபோடுகையில் புண்ணிய தலத்தில் நடக்கும் புளகாங்கிதம் பெறுகின்றோம். என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என்கிறது உள்ளம். திருமுறை ஓசை கேட்கும் போது நாவலர் நினைவுகளில் அகமகிழ்வோம். திருவாதிரை அபிஷேகம் ஆடவல்லானின் ஞானக் குளியல்காட்டி, அவனது பொன்னார் திருமேனி ஆருத்திரா தரிசனத்தைக் காட்டும்.

அப்பொழுதல்லவோ மனிதப்பிறவியின் பயனை அனுபவிக்கின்றோம். பலகோடி ரூபாய் செலவில் பல ஆண்டுகளாக கருங்கல் சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பெற்று அமைந்த இரு இராஜ கோபுரங்கள் ஐயனாருக்கும் சிவனுக்கும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவற்றின் வர்ண வேலைப்பாடுகளும் முடிவுற்று குடமுழுக்குவிழாச் செய்ய நாள்களும் நிச்சயிக்கப்பட்டிருக்கையில் ஈழப்போரின் தாக்கத்தினால் யாவும் தடையுற்றிருக்கின்றன.

திருவெம்பாவை திருவாதிரை விழா காண்போர் வாழி
பூசனை செய்வோர்! வாழி பூசை காண் அடியார் வாழி!
திண்ணபுரத்து நின்றாடிடும் ஈழத்துச் சிதம்பரேசன்
திருத்தாள் வாழிய வாழியவே!

*வீரகேசரி, 15-12-95*

---

ஈழத்துச் சிதம்பர மகா கும்பாபிஷேகம் 07-06-1998 இல் இனிது நிறைவெய்தியது.

ஈழத்துச் சிதம்பரம்

# திருத்தல வரலாற்றுப் பெருமையும் குடமுழுக்கு விழாவும்

செந்தமிழையும் சைவ சமயத்தையும் போற்றிப் பேணி வரும் சீரிய நகர் என்ற வகையில் ஈழத்துச் சைவ வரலாற்றில் காரை நகருக்கு தனியானதோர் இடமுண்டு. காரை நகருக்கு உரிய பண் பாட்டுச் சிறப்புகள் பலவாகும். ஆறுமுக நாவலர் வகுத்த சைவ சமய மரபுப்படி இங்கு வளர்ந்துள்ள சமய பண்பாட்டு வளர்ச்சி திருக்கோயில்களை மையமாகக் கொண்டுள்ளது. ''ஈழத்துச் சிதம்பர புராணம்'' காரைநகரை ஒரு சிறந்த புண்ணிய பூமியாகப் போற் றுகிறது. இப்புராணம் காரைநகர் திண்ணபுரம் என்னும் திருத்த லத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்கள் வினை தீர்க்கும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசப் பெருமான் ஆண்டிகேணி ஐயனாரினதும் அருட்சிறப்புகளையும் தவப் பெருமையையும் போற் றிக் கூறும் வகையில் எழுந்துள்ளது· இத் திருத்தலம் காரைநகரை ஒரு கோயில் மாநகரம் எனப்போற்றுமளவுக்கு இந்த நகருக்கு தெய்வீகப் பொலிவைத் தருகிறது. வித்துவான் எவ். எக்ஸ் ஸி. நடராசா எழுதிய ''காரைநகர் மான்மியம்'' சிவஸ்ரீ க. வைத்தீஸ் வரக் குருக்கள் எழுதிய ''காரைநகரில் சைவ சமய வளர்ச்சி'' என்னும் நூல்கள் பலவும் இந் நகரின் பண்பாட்டு வரலாற்றை கோடிட்டுக் காட்டுகின்றன.

யாழ். குடாநாட்டின் பழம்பெருந் தீவுகளில் ஒன்றான காரை நகர், யாழ்நகரிலிருந்து வடமேற்குத் திசையில் இருபது கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. மிகப் பழைய காலம் முதல் இப்பகுதி யில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு காரைச்செடிகள் மிக விருந்தபடியால் காரைதீவு என்று பெயர் உண்டாயிற்று என்றார். தமிழகத்துடன் மிகப்பழைய காலத்தொடர்பு கொண்டதாக வரலாறு கூறுகின்றது. 1980 ம் ஆண்டு களபூமி என்னும் இடத்தில் யாழ். பல்கலைக்கழகத்தினர் நடத்திய அகழ்வாராய்ச்சி மூலம் சான்றுகள் கிடைத்துள்ளன. காரைநகர் யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் 1869 ம் ஆண்டு அப்போது அரசாங்க அதிபராகவிருந்த துனவனத்துரையால் இணைப்புப் பாலம் மூலம் ஒன்றுசேர்க்கப்பட்டது. அன்று முதல் காரைநகர் என்று சிறப்புடன் வழங்கப்பட்டு வருகிறது. காரைநகர்

தொடர்பான வரலாறுகள் இன்னும் பலவுண்டு. இவை யாவற்றை யும் ''காரைநகர் மான்மியம்'' என்னும் நூல் எடுத்துக் கூறு கின்றது.

## திருத்தல வரலாற்று மகிமை

இத் தலத்தின் வரலாற்றை ஈழத்துச் சிதம்பர தலபுராணம் சிறப்பித்துச் சொல்கிறது. தற்பொழுது ஈழத்துச் சிதம்பரம் அமைந் துள்ள நிலப்பரப்பும், சுற்றாடலும் பண்டைக்காலம் தொடக்கம் சிவபுண்ணிய பூமியாக வரலாற்று ரீதியாக குறிக்கப்பட்டுள்ளது. ஞானபூமியாகிய பாரத நாட்டில் வாழ்ந்த துருவாசர் என்னும் பெருமுனிவர் இங்கு போந்து ஈழத்துச் சிதம்பரத்துக்கு அண்மையில் பர்ணசாலை அமைத்து சிவ பூசையுடன் தவம்புரிந்து வீடுபேறு பெற்றார். அன்றியும் தினகரன் என்னும் தபோதனர் ஈழத்துச் சிதம் பரம் திண்ணபுரம் வந்திருந்து சைவத்தையும் தமிழையும் வளர்த்து வந்தார். அவர் வாழ்ந்து, தவம் செய்த இடம் இன்றும் தினகரன் பிட்டி என்று வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ''அகத்தியர் வர லாறு'' என்னும் நூலில் அகத்தியர் என்னும் பெயர் பூண்ட மா முனிவர் என்பவர் காரைதீவுக்கு தனியாக வந்து ஆச்சிரமம் அமைத்து கடுந்தவம் புரிந்தார் என்று கூறப்பட்டுள்ளது. புண்ணிய பூமியாகிய காரைநகர் திண்ணபுரம் பகுதியில் பன்நெடுங்காலமாக முனிவர்க ளும் துறவிகளும் வணக்கசாலைகளை அமைத்து வழி பாட்டுத் தலங்களாக வழிபாடு செய்து வந்துள்ளனர் என்று வரலாற்று ரீதி யாக அறியக்கிடக்கின்றது. ஏறக்குறைய 250 ஆண்டுகட்கு முன்னர் அவ்விடத்தில் ஆண்டி என்னும் இறைபக்தி மிகுந்த துறவி வாழ்ந்து வந்தார். அங்குள்ள அரச மரத்தடியில் வைரவசூலத்தை வைத்து பூசை வழிபாடு செய்து தவவாழ்க்கை வாழ்ந்து வந்தார். பின்னர் அரச மரத்துக்குத் தென்கிழ்த் திசையில் ஓர் ஒளி தோன்றியதை அப்பெரியார் கண்டார். அந்த இடத்தை பெரியார் ஆண்டி அகழ்ந் தார். தெய்வீக அருளினால் அங்கே பூரணை, புட்கலை சமேத ஐயனார் விக்கிரகத்தை கண்டெடுத்தார். இவ் விக்கிரகத்தை அங்கு நிறுவிப் பூசை வழிபாடு செய்து வந்தார். ஆண்டி தோண்டி எடுத்தபடியால் ஆண்டிகேணி என்றும் எடுக்கப்பட்ட விக்கிரகம் ஆண்டிகேணி ஐயனார் எனவும் இன்றும் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டி பல வருடங்களாக பூசை செய்து வருகையில் களபூமியைச் சேர்ந்த அம்பலவிமுருகர் என்னும் சிவபக்தரும் மற்றும் அடியார்களும் சேர்ந்து வரலாயினர்.

காலப்போக்கில் ஆண்டிப் பெரியாரின் அருள் வாக்குப்படி அம்பல விமுருகர் அரசமரத்துக்கு வடபால் ஐயனார் கோவில் அமைத்து மகா

கும்பாபிசேகமும் செய்வித்தார். பின்னரும் அற்புதம் நிகழ்ந்தது. ஆண்டிகேணி ஐயனார் எழுந்தருளுவதற்கு வேண்டிய உற்சவ மூர்த்தியை சிற்பாச்சாரியார் ஒப்பம் செய்யத் தொடங்கியபோது திருவுருவத்தினின்றும் உதிரம் வடியத் தொடங்கியது. அதைக் கண்ட சிற்பியும் முருகரும் ஆச்சரியமடைந்து திகைத்து நின்றார்கள். பின்னர் அத் திருவுருவம் ஒப்பம் செய்யப்படாத நிலையிலேயே கும்பாபிஷேகம் செய்யப்பட்டு பூசிக்கப்பட்டு வருகிறது. இதனை இன்றும் காணலாம்.

அம்பலவிமுருகர் தலைசிறந்த சிவ பக்தர். காலக்கிரமத்தில் ஐயனார் கோவிலுக்குப் பக்கமாக சிவன் கோவிலைக் கட்டுவித்தார். பின்னர், அங்கு தாபிப்பதற்கு சிவலிங்கத்தைப் பெறுவது பற்றி நினைந்து ஏங்குவாராயினார். அக்காலத்தில் சிவலிங்கம் இலங்கையில் கிடைக்காது. செய்யக் கூடிய சிற்பாச்சாரியாரும் இங்கு இருக்கவில்லை. ஒரு நாள் இறைவன் பெரியவரது கனவில் தோன்றி, சிதம்பரத்திலுள்ள ஒரு சிற்பியிடம் பதினாறு சிவலிங்கங்கள் உள்ளன என்றும் அவற்றுள் தம்மால் அடையாளம் காண்பிக்கப்படும் சிவலிங்கத்தைப் பெற்று வரும்படியும் கூறிமறைந்தார்.

அவ்வாறு முருகரும் சிதம்பரம் சென்று பதினாறு சிவலிங்கங்களையும் கண்டு கொண்டார். அவற்றினை ஆராய்ந்தபோது ஏழாவது சிவலிங்கத்தில் காற்று உயிர்த்து எழுவதைக் கண்டு, இதுவே இறைவனின் அருட் குறிப்பென்பதை உணர்ந்து அதனையே பெற்றுக் கொண்டார். அம்பிகை, விநாயகர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரர், நந்தி, பலிபீடம் முதலான திருவுருவங்களையும் செய்வித்துக் கொண்டு காரைநகர் திண்ணபுரம் திரும்பி சிவாலயத்தில் அம்மூர்த்திகளை பிரதிஸ்ட்டை செய்வித்தார். சிவலிங்கப் பெருமானதும், அம்பிகையினதும் தோற்றத்தின் பொலிவையும் அழகையும் கண்ட சிவாச்சாரியர்களும் சைவப் பெரியார்களும் சிவலிங்கத்துக்கு சுந்தரேஸ்வரர் என்றும் அம்பிகைக்கு சௌந்தராம்பிகை என்றும் திருநாமமிட்டு வாழ்த்தி பணிந்து வணங்கினர்.

மேலும் பெரியதோர் அற்புதம் சோமாஸ்கந்த மூர்த்தியை வார்த்தபோது நடைபெற்றது. சோமாஸ்கந்த மூர்த்தியை இருமுறைவார்ப்பித்த போது கருச் சிதைந்துவிட்டது. முருகர் பெரிதும் மனம் நொந்து திருவருளை வேண்டி, தம் காதுகளில் அணிந்திருந்த பொற் கடுக்கன்களைக் கழற்றிச் சிப்பியிடம் கொடுத்து அவற்றையும் சேர்த்து உருக்கி வார்க்கும்படி வேண்டினார். இம்முறை நன்றாக அமைந்து திருவுருவம் அழகாக அமைந்து விட்டது. இதை சிற்பி வாயிலாக அறிந்த முருகருடைய ஆன்மா அத்திருவுருவிலே

கலந்ததுபோல சிவபதம் அடைந்து விட்டது. எல்லாம்வல்ல ஈழத்துச் சிதம்பரநாதனின் அன்பையும் கருணையையும் என்னவென்று சொல்வது! பின்னர் முருகரின் மகன் சண்முகத்தார் அம்மூர்த்தியை திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் கொண்டு வந்து கும்பாபிஷேகம் செய்வித்தார்.

## கோயில் அமைப்பில் தில்லைச் சிதம்பரம்

இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களைப் பெற்று, தமிழ்நாட்டின் தல மகிமை பெற்று விளங்கும் சிதம்பரத்தில் நிகழும் கிரியை மரபுகளைப் பின்பற்றும் பாரம்பரிய சிறப்புப் பெற்றது. எல்லா வகையாலும் சி த ம் ப ர ம் போல் சிறப்புப் பெற்ற இத்தலத்திற்கு ''ஈழத்துச் சிதம்பரம்'' என்னும் சிறப்புப் பெயர் உரித்தாயிற்று. ஈழத்துச் சி த ம் ப ர த் தி லு ள் ள நடராசப் பெருமானின் திருவுருவம், சிதம்பரத்தில் அமையப் பெற்றது போல் மிகவும் அற்புதமானது. வியாக்கிரபாத மு னி வ ரு ம் பாஞ்சாலி முனிவரும் இருமருங்கிலும் தொழுதேத்த ஐம்பத்தியொரு சுடர்களைக் கொண்ட வட்டத்திருவாசியுடன் கூடியது, ''ஓம்'' என்னும், ஓங்காரப் பிரணவம் திருவாசியாக உள்ளது. திருவாசியின் தீச்சுடர்கள் தீயவைகளை அழிக்கும் தத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. அவரின் திருநடனமே உலகை இயக்குகின்றது. அவரின் ஆனந்த தாண்டவ திருநடனத்தால் பஞ்சகிருத்தியங்களும் நிகழ்கின்றன. இவ்வாறான அமைப்பும் அழகும் பொருந்திய திருவுருவம் இந்தியாவில் சிதம்பரத்தலத்தில் உண்டெனக் கோயில் வரலாற்றிலும், மூர்த்தி சிற்பக்கலை நுணுக்கங்களில் நிபுணத்துவமுள்ள மு. பாஸ்கரத் தொண்டமான் 1963ம் ஆண்டு ஈழத்துச் சிதம்பரத்தை தரிசிக்க வந்த போது கூறியதுடன் ''கலைமகள்'' பத்திரிகையில் ஈழத்துச் சிதம்பரத்தின் சிவகாமி அம்பாள் சமேதராக அமைந்திருக்கும், நடராச மூர்த்தம் பற்றிக் கட்டுரை எழுதியிருந்தார்.

இத்தலத்தில் நடைபெறும் மார்கழித் திருவாதிரை விழா தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். தில்லையம்பதியில் நிகழும் ஐதீகங்களையொத்த வகையில் நடராசப் பெருமானுக்கும் சிவகாமியம்மாளுக்கும் உரிய முறையில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்வது கண்கொள்ளாக் காட்சியாகும். ஆதிரை அபிஷேகத்தையும் அதன்மேல் சூரியோதயத்தில் நடைபெறும் ஆருத்தரா தரிசனத்தையும் க ண் டு களிக்க ஈழத்தின் நாற்றிசைகளிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மெய்யன்பர்கள் இங்கு வ ரு கை தருவார்கள். தமிழக தில்லைச்

சிதம்பரம் சென்று ஆருத்தரா தரிசனம் காண முடியாத சிவனடியார் களுக்கு இது பெரிய வரப்பிரசாதமாகும். இக்காலத்தில் காரைநகர் மணிவாசகர் சபையினர், கோவில் வசந்த மண்டபத்தில், மணிவாசகர் விழாவை சிறப்பாக நடத்துவர். காலத்துக்குக் காலம் மணிவாசகர் விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்த இந்திய அறிஞர்கள் திரு. பாஸ்கரத் தொண்டமான், பேராசிரியர் சோ. சிங்காரவேலன், வித்துவான் ச. தண்டாயுதபாணி தேசிகர், திருமுருக கிருபானந்த வாரியார், திரு. க. வச்சிரவேலு முதலியார் இக்கோயிலின் அமைப்பு முறை சிதம்பரம்போல் உள்ளது என்றும் தலமகிமையும் தெய்வ அருள் பொருந்தியதும் சிவகாமியம்பாள் சமேதராக அமைந் திருக்கும் தில்லைக் கூத்தன் திருவுருவ அமைப்பையும் வாயாரப் போற்றியும் கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். மூதறிஞர் கி. வா. ஜெகநாதன் 'கலைமகள்' சஞ்சிகையில் எழுதிய கட்டுரைத் தொகுப்பு குறிப்பிடத்தக்கவை. ''முந்தை மாலொடு முண்டகன் கண்டிலா அந்தணாளன் சிற்றம்பலத்தாடுவான் வந்து திண்ணவளம் பதி மேவிய சுந்தரேசனின் திருவடி சூடுவாம்''

## 07-06-98 ல் மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது

ஈழத்துச் சிதம்பரத்தின் சிறப்பம்சம் யாதெனில் அங்குள்ள ஐயனார் கோயிலும், சிவன் கோயிலும் மிக்க அண்மையில் ஒன்றுசேர சமாந்தரமாகக் கிழக்குத் திசையை நோக்கி அமைந்துள்ளன. இந்த விதமான அற்புதமான அமைப்பு முறை இலங்கையில் வேறு எந்தக் கோயிலிலும் இல்லை என்று கூறலாம். வழிபடச் செல்வோர் ஐயனார் வாசல் வழியாகவே உள்ளே செல்வர். இந்த வழக்க முறைமை தொன்று தொட்டே இருந்து வருகிறது. ஈழத்துச் சிதம்பரம் தொடர்பான பல தெய்வீக நூல்கள் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் முதன்மை பொருந்தியது கவி சிந்தாமணி புலவர்மணி பண்டிதர் சோ. இளமுருகனார் இயற்றிய தலபுராணம் கூறும் ஈழத்துச் சிதம்பர புராணமாகும். மற்றும் திண்ணபுர அந்தாதி, திண்ணபுர வெண்பா, ஊஞ்சல், சுந்தரேசுவரர் பதிகம், சுந்தரேசுவரர் வரலாறு, திருமுறை மலர்கள், மகாகும்பாபிஷேக மலர்கள், காரைநகர் மணிவாசகர் சபை வெளியீடுகள் முதலியன அடங்கும்.

அருள்மிகு சிவபெருமானுக்கும் ஐயனாருக்கும் பலகோடி செலவில் பல ஆண்டுகளாகத் திருப்பணி வேலைகள் நடைபெற்று கருங்கல் சிற்பவேலைப்பாடுகள் அமைந்த இரட்டை இராஜகோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவற்றின் வர்ண வேலைப்பாடுகளும் நிறைவடைந்துள்ளன. 1988 ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்

பட்டு, நாட்டில் ஏற்பட்ட அசாதாரணசூழ்நிலை காரணமாக தடைப் பட்டு விட்ட இராஜகோபுர கும்பாபிஷேகமும் குடமுழுக்கு பெரும் சாந்தி விழாவும் எதிர்வரும் வைகாசி மாதம் 24ம் திகதி (07.06.98) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிமுதல் கோலகலமாக நடை பெறுவதற்கு திருவருள் பாலித்துள்ளது.

ஈழத்துச் சிதம்பரத்தில் திருநடனம் புரிகின்ற ஸ்ரீ நடராசப் பெருமானைப் போற்றி வணங்குகையில் உள்ளத்தில் உவகையும் பக்தியும் பொங்குகிறது. மெய்சிலிர்க்கிறது. இங்கே முழங்கும் மணி யோசை இதயத்தை சிவலோகமாக்கிறது. என்ன புண்ணியம் செய் தனை நெஞ்சமே என்கிறது உள்ளம். அப்போதெல்லாம் மனிதப் பிறவியின் பயனை அனுபவிக்கிறோம்.

''வெண்ணிலாத் தவழுமாட வியன் புரங்கோயில் கொண்ட
கண்ணுதற் பெருமான் மற்றைக் கடவுளர்
மலர்த்தாளேந்தித் தண்ணிழ லடைத்தோர் வாழி
தகைவிழாக் காண்போர் வாழி மண்ணிலிப் பதியின்காதை
வழி வழி தழைத்து வாழி''

— ஈழத்துச் சிதம்பர புராணம்.

தினகரன் வாரமஞ்சரி, 1998 மே 31

---

கடையவனேனைக் கருணையினாற் கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதிகண்டாய் விறல்வேங்கையின் தோல்
உடையவனே மன்னுமுத்தர கோசமங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தே னெம்பிரான் என்னைத் தாங்கிக்கொள்ளே.

கொள்ளேர்பிளவ கலாத்தடங் கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளேனெனினும் விடுதிகண்டாய்நின் விழுத்தொழும்பின்
உள்ளேன் புறமல்லேன் உத்தரகோச மங்கைக்கரசே
கள்ளேனொழியவும் கண்டுகொண் டாண்ட தெக்காரணமே.

காருறு கண்ணியர் ஐம்புலனாற்றங் கரைமரமாய்
வேருறுவேனை விடுதிகண்டாய் விளங்குந் திருவார்
ஊருறைவாய் மன்னும் உத்தரகோச மங்கைக்கரசே
வாருறு பூண்முலையாள்பங்க என்னைவளர்ப்பவனே.

# திண்ணபுரச் செல்வனின் காதை
# ஈழத்துச் சிதம்பர புராணம்

ஈழத் திருநாட்டிலுள்ள சைவப் பெருமக்கள் தமிழகத்திலேயுள்ள சிதம்பரத்தில் மிகவும் பற்றுள்ளவர்கள். இங்குள்ள சைவப் பெருமக்கள் சிதம்பரத்திலே எழுந்தருளியிருக்கும் நடராசப் பெருமானை அங்கு சென்று வழிபட்டு வந்தமை வரலாறு வாயிலாக அறியக் கிடக்கின்றது. எனவே, ஈழத்திலும் சிதம்பரம் என்று பெயரைச் சூட்டிக் கொண்டமை சிதம்பரத்திலே வைத்திருக்கும் அன்பைப் பிரதிபலிப்பதாகும். காரை நாட்டு சைவமக்கள் திண்ணபுரத்திலே கோயில் கொண்டருளிய சுந்தரேஸ்வரப் பெருமானை சிதம்பரத்திலே எழுந்தருளியிருக்கும் பெருமானாகக்கண்டு இக்கோயிலை ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றினர். இவ்வாலயத்தில் வழிபாடுகளும், விழாக்களும் சிதம்பரத்தைப் போன்றே நடைபெறுகின்றன.

இத் தலத்திற்கு புராணம் இல்லையென்ற குறையை நீக்க ஈழத்துக் கவிஞர் பரம்பரையில் உதித்த சோமசுந்தரப் புலவரது மூத்த புதல்வராகிய புலவர்மணி இளமுருகனார் அவர்கள் திண்ணபுரத்திலே கோயில் கொண்டருளிய சுந்தரேசப் பெருமானின் தல வரலாற்றை வண்ணவண்ணத் தமிழிலே, உள்ளக்கமலத்திலே சிவானந்தத் தேனருவியாக அமைத்துத் தந்துள்ளார். புலவர்மணியின் காவியத்திற்கு மெருகூட்டுவதாக அமைந்துள்ளது, அவரது வாழ்க்கைத் துணைவியாகிய பண்டிதமணி பரமேஸ்வரி அவர்களின் உரை. இந்நூல் கண்ணையும், கருத்தையும் கவரும் வனப்பினதாய் விளங்கச் செய்த பதிப்பாசிரியர் சிவத்திரு. க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களை இத்தல புராணத்திலிருந்து பிரித்தெடுக்க முடியாது.

தல புராணங்களில் பெரும்பாலானவை மொழிபெயர்ப்புக்களே. இப்புராணம் மொழிபெயர்ப்பாகாது முதனூலாகத் திகழ்வது ஒரு தனிச்சிறப்பாகும். இறைவணக்கம், அவையடக்கம், நூற்பயன், நகர வளம், நாட்டு வளம், ஆற்று வளம், நகர் வளம் என்பன இப் புராணத்தில் அமைந்துள்ள தனிச் சிறப்புகளாகும்.

ஈழத்துச் சிதம்பர புராணம் ஒரு காவியம். இது பத்துச் சருக்கங்களைக் கொண்டது. அவையானவை பாயிரச்சருக்கம், காரை வளச் சருக்கம், திண்ணபுரச் சருக்கம், தவம்புரிச் சருக்கம், ஐயனார்

கோயில்காண் சருக்கம், சுந்தரேசரின் கோயில் காண் சருக்கம், அந்தணர் பூசை புரிச் சருக்கம், சோமஸ்கந்தர்ச்சருக்கம், திருக்கோயில் பாதுகாவலர் சருக்கம், விழாவயர் சருக்கம் என்பனவாகும்.

## பாயிரச் சருக்கம்:

இச்சருக்கத்தில், இறைவணக்கத்தையும், நூல் செய்தவரலாற்றையும், நூலில் பொதிந்து கிடக்கும் பொருட் கூறுகளையும், உள்ளடக்கிய 33 செய்யுள்கள் உள்ளன.

## காரைவளச் சருக்கம்:

காரைநாட்டில் உள்ள இயற்கை எழில், செயற்கை வளம் சான்றோர் வளம் ஆகிய பலவகை வளங்களைக் கூறும் 148 செய்யுள்களைக் கொண்டது. இச் சருக்கத்தில் ஒரு புதுமையைச் சிருஷ்டித்திருக்கின்றார் இதன் ஆசிரியர். ஆறுகள் இல்லாத இக்காரை நாட்டில் என்றும் வற்றாத ஒரு ஆற்றினை உருவாக்கி உள்ளார். காரை நாட்டு மக்களின் ஒழுக்காற்றையே ஆறாக உருவகித்துக் கூறுகிறார் என்பதை கீழ்வரும் பாடல் தெளிவு படுத்துகின்றது;

''நல்லை நாவலன் நன்மலை யூற்றெழுந்
தொல்லையில் பதி யெங்கணும் பாய்ந்தது
சில்ல மென்கிளை யுள்ளொன்றிச் சீர்ப்பதி
புல்லியெங்கும் புகுந்தது பேசுவாம்''

ஆறுமுகநாவலரை மலையாகவும், அவர் கடைப்பிடித்த சைவ ஒழுக்க நெறிகளை ஆறாகவும், அவ்வொழுக்க நெறியைப் பின்பற்றி யொழுகிய தமிழகத்தையும், ஈழத்தையும் அவ்வாறு பாய்ந்த இடங்களாகவும் உருவகித்து, அவ்வொழுக்கம் காரை நாட்டு மக்களால் கடைப்பிடிக்கப்பட்டதால் அவ்வாற்றின் ஒருகிளை காரை நாட்டிற்கும் பாய்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. காரைநாட்டு மக்களின் ஒழுக்க நெறிகளைப் படம்பிடித்துக் காட்டுவதாகவும், அவ்வூர் மக்கள் போற்றப்பட்டுள்ளதாகவும் காணலாம்.

## திண்ணபுரச் சருக்கம்:

இச் சருக்கத்தில் சிவன் கோயிலுடன் தொடர்புடைய மற்றும் பல ஆலயங்களையும், அக் கோயில்களில் பூசை செய்யும் அந்தணர்களினதும் அடியார்களினதும் சிவவாழ்வினையும் மூன்றாம்வீதியிலுள்ள மணிவாசகர் மடாலயம், சிவாச்சிரமம், தீர்த்தங்கள், திருத்தல நன் மரங்கள், பூஞ்சோலைகள் ஆகியவற்றின் இயற்கை சொட்டும் அழகை

எடுத்துக் காட்டுவனவாக 85 செய்யுள்களும் அமைந்துள்ளன. இப் பதியிற் பல முனிவர்கள் தவம் புரிந்தமையினால் முத்தியடைந் தார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

## தவம்புரிச் சருக்கம்

பல சிவனடியார்கள் திண்ணபுரத்திலே தவம் செய்து வீடுபேறு அடைந்த வரலாற்றைக் கூறும் 102 செய்யுள்களையுடையது. இந் தியாவிலிருந்து தூர்வாச முனிவரும், அகத்திய முனிவரும் தும்பில் என்னும் இடத்தில்தவம் புரிந்தார்கள் என்பதும், தினகரன் முனிவர் தினகரன் பிட்டியில் தவம் செய்தாரென்பதும், ஆண்டிமுனிவர் திண்ணபுரத்தில் உள்ள அரச மரத்தின் கீழ் தவம் செய்தார் என்பதும் புலனாகும்.

இச்சருக்கத்தில் பௌத்த பிக்கு ஒருவர் ஆண்டிமுனிவர் வைத்து வழிபட்ட சூலத்தை வணங்கியதால் மனவமைதி பெற்றதாக ஒரு சிறப்புச் சொல்லப்பட்டுள்ளது. மேலும், ஒரு அற்புத வரலாறும் உண்டு. இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இராமநாதபுரம் சேதுபதி மகாராசாவின் கட்டளைப்படி, சேதுக்கரையைக் காவல் செய்த வீரர்களின் பரம்பரையில் தோன்றிய ஆண்டி முனிவர் என்பவர் ஈழநாட்டிலுள்ள சிவதலங்களை வணங்கி வரும்பொழுது வியாவி லுள்ள ஐயனார் கோவில் ஒல்லாந்தரால் இடிக்கப்பட்ட நிலையைக் கண்டு வருந்தினாரென்றும், அன்று இரவே ஐயனார் அவர் கனவில் தோன்றி தாம் திண்ணபுர அரசின் கீழ் இருப்பதாகக் கூறியதாக வும் ஆண்டி முனிவர் அவ்வரசின் கீழ் தாம் கொண்டுவந்த சூலத்தை வைத்து வணங்கியதாகவும், அப்பொழுது தென்கிழக்குத் திசையில் ஒரு ஒளி தோன்ற அவ்விடத்தைத் தோண்டி ஐயனார் திரு உரு வொன்றை ஆண்டி முனிவர் பெற்றதாகவும் அத்திரு உருவத்தினை அரச மரத்தின் கீழ் வைத்துப் பூசைசெய்து வழிபட்டதாகவும் இச் சருக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## ஐயனார் கோயில் காண் சருக்கம்:

இங்கே வியாவிலிலும், திண்ண புரத்திலும் ஐயனார் செய்த அற்புதங்களைக் கூறும் 56 செய்யுள்கள் உண்டு. ஆண்டி முனிவரின் விருப்பத்தை நிறைவேற்றுமுகமாக, அம்பலவி முருகர் அவர்களால் ஐயனார் கோவில் கட்டப்பட்டது, எழுந்தருள் மூர்த்தியொன்றைக் கொண்டுவர அவர் இந்தியாவிற்குச் சென்றாரென்றும், அங்கே சிற்பாசாரி ஒருவர் திருவுருவத்திற்கு ஒப்பஞ்செய்யும் பொழுது இரத்தம் வடிந்ததாக இச் சருக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## சுந்தரேசர் கோயில்காண் சருக்கம்:

திலையிற் சுத்தனை திண்ணபுரத்தில் காண விரும்பிய அம்பல விமுருகர், ஐயனார் கோயிலின் அருகே சிவன்கோயிலை அமைத்தார். கனவில் இறைவன் தோன்றி கேட்டுக்கொண்ட வண்ணம் சிதம்பரத்திற்குச் சென்று சிவலிங்கத்தைப் பெற்று மங்கலம் செய்ததையும் கூறும் 44 செய்யுள்களையுடையது. இச்சருக்கத்தில் இரு எருதுகள் திருப்பணிக்கு வேண்டிய பொருட்களை சலிப்பின்றிச் சுமந்த வரலாறும், இரு நாகங்கள் அப்பொருட்களைக் காவல் புரிந்த வரலாறும் மிக அழகாகவும் உள்ளத்தை உருக்கும் வகையிலும் கூறப்பட்டுள்ளமை இச்சருக்கத்தை அழகு படுத்துவதாக அமைந்துள்ளது.

''பெரியார் தமது திருப்பணிக்கே
 பெரிதுந் துணையாம் படியிருக்கத்
திருவாரிரண்டு காளைகளைச்
 சேடன்போல வளர்த்தனரால்
உருவார் கந்தன் சங்கரனென்
 துயர்ந்த பெயரா வழைத்தவழி
மருவா நின்று பணிகேட்டு
 மைந்தர் போல வந்தனையும்''

''நீலகண்டனாராணையி னித்தலும்
வாலன் கூழைய னென்றிரு மாகங்
கோலக் கோயிற் பொருட்குறு காவலாய்ச்
சாலநின்று சரித்திடு மென்பரால்''

## அந்தணர் பூசைபுரிச் சருக்கம்

அம்பலவி முருகர் தாம் கட்டுவித்த சிவன் கோயிலுக்கு இராமசாமி ஐயர் அவர்களைப் பூசாரியாக்கியதும் அவர்முன்னே ராமசாமி ஐயருக்கு பின்வந்த அந்தணர்களின் வரலாறுகளும், இச் சருக்கத்திலுள்ள 33 செய்யுள்களால் விளங்கா நிற்கும். இந்த அந்தணர்களின் பாதையிலே வந்து, இக் கோயிலிலே 64 வருடங்கள் பூசையைச் செவ்வனே செய்த சிவத்திரு கணபதீஸ்வரக் குருக்கள் போற்றப் பட்டுள்ளார்.

## சோமாஸ்கந்த சருக்கம்

அம்பலவி முருகர் சோமஸ்கந்தர் திருவுருவை அமைப்பிக்க தில்லைக்குத் தமது மகன் சண்முகத்தார் சகிதம் சென்று சோமாஸ்

கந்த உருவம் வார்ப்பித்தபோது அதன் அழகைக் கண்டதும் அவர் இந்தியாவிலேயே சிவபதம் அடைந்ததும், சண்முகத்தார் சோமாஸ் கந்தர் உருவத்தைக் காரைநகரிற்குக் கொண்டுவந்த வரலாறும் 51 செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது. இச் சருக்கத்தில் இரண்டு வரலாறுகள் மிகவும் உருக்கமான முறையில் கூறப்பட்டிருப்பதை அறியலாம். ஒன்று ஏற்கனவே சிவலிங்கம் பெற்ற சிதம்பரத்திற்குத் தனியே சென்று வந்த அம்பலவி முருகர் அடுத்தமுறை தனியே செல்லவில்லை. அவர் புறப்படும் போது பசுவொன்று அதன் வாலினால் அவரை அடித்ததும் தமக்கு அங்கு சிவபதம் கிடைக்கக்கூடுமென்ற அறிகுறியினால் மைந்தனையும் கூட்டிச் சென்றார் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

தில்லையிற் சிற்பியர் சோமாஸ்கந்தர் வடிவத்தை வார்க்கத் தொடங்கி முதல் இரு முறைகளும் உருக்கி வார்த்த போது கரு சிதைந்து உருவம் அமையாது போனதைக் கண்ட அப்பெரியார், தம் காதிலிருந்த கடுக்கனைக் கழற்றிக் கொடுத்து அவற்றையும் சேர்த்து உருக்கி வார்க்கும் வண்ணம் அச் சிற்பியாரிடம் கூறினார். சிற்பி அவ்வாறே செய்ய சோமாஸ்கந்த திருவுருவம் மிகவும் அழகாகவும் சிறப்பாகவும் அமைந்தது கண்டு சிவமுருகர் சிவபதம் அடைந்தது இரண்டாவது வரலாறு.

## திருக்கோயிற் பாதுகாவல் சருக்கம்

கோயிலை அமைத்த சைவப் பெரியார் அம்பலவி முருகர் தற்பொழுதுள்ள சைவப் பெரியார்களாகிய அ ஆண்டி ஐயா, து முருகேசு ஆகியோர் உட்பட கோயிலைப் பாதுகாத்து வளம்படுத்திய பாதுகாவலர்களைப் பற்றிக் கூறும் 15 செய்யுள்களைக் கொண்டதாகும்.

## விழாவயர் சருக்கம்

ஆண்டுதோறும் இத்தலத்திற் செய்யப்படும் திருவிழாக்கள் பொங்கல்கள், பூசைகள், அன்னதானங்கள் முதலியவற்றையும் திருவாதிரை தீர்த்த உற்சவத்தையும், திருவூடலையும் பங்குனித் திருவிழாவையும் விழாக்களின் தத்துவக் கருத்துக்களையும் உள்ளடக்கிய 160 செய்யுள்களைக் கொண்டதாகும்.

இப்புராணம் படிப்போர்க்கு நாடகம்போலப் பல வகைச்சுவைகளையும் உண்டாக்குதலே செய்யுள் இலக்கியப் பண்பாடாகும் எனலாம். ஈழத்துச் சிதம்பர புராணம் செந்தமிழ்ச் செய்யுள் இலக்

கிய மறுமலர்ச்சி உடையது. இதுபோன்ற இலக்கியம் படைப்போர்க்கு இப்புராணம் ஒரு எடுத்துக் காட்டாகும்.

பாட்டும் உரையும், ஒருங்கிணைந்து புகழ்பெற்ற பண்டைக் காலத்து இலக்கியங்கள் போல இப்புராணம் பாட்டும் உரையும் ஒருங்கிணைந்து புகழோங்கியுள்ளது. இந்நூல் சைவசித்தாந்திகளுக்கு ஒரு வரப்பிரசாதமெனில் அது மிகையாகாது.

தினகரன்,
7-497

---

வளர்கின்ற நின்கருணைக்கையில் வாங்கவும் நீங்கியிப்பால்
மிளிர்கின்ற என்னை விடுதிகண்டாய் வெண்மதிக் கொழுந்தொன்று
ஒளிர்கின்ற நீண்முடி உத்தரகோச மங்கைக்கரசே
தெளிகின்ற பொன்னும் மின்னுமன்ன தோற்றச் செழுஞ்சுடரே.

செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழியாரிற் பன்னாள்
விழுகின்ற என்னை விடுதிகண்டாய் வெறிவாயறுகால்
உழுதின்ற பூமுடி உத்தரகோச மங்கைக் கரசே
வழிநின்று நின்னருள் ஆரமுதூட்ட மறுத்தனனே.

மறுத்தனன் யானுன் அருளறியாமையில் என்மணியே
வெறுத்தெனை நீவிட்டிடுதி கண்டாய் வினையின் தொகுதி
ஒறுத்தெனை ஆண்டுகொள் உத்தரகோச மங்கைக்கரசே
பொறுப்பர் அன்றே பெரியோர் சிறுநாய்கள்தம் பொய்யினையே.

பொய்யவனேனைப் பொருளென ஆண்டொன்று பொத்திக்கொண்ட
மெய்யவனே விட்டிடுதி கண்டாய் விடமுண் மிடற்று
மையவனே மன்னும் உத்தரகோச மங்கைக்கரசே
செய்யவனே சிவனே சிறியேன்பவம் தீர்ப்பவனே.

தீர்க்கின்றவாறென் பிழையைநின் சீரருள் என்றுகொலென்று
வேர்கின்ற என்னை விடுதிகண்டாய் விரவார் வெருவ
ஆர்க்கின்ற தார்விடை உத்தரகோச மங்கைக்கரசே
ஈர்க்கின்ற அஞ்சொடு அச்சம் வினையேனை இருதலையே.

# தில்லைக் கூத்தன் திருக்கோலம் உணர்த்தும் தத்துவங்கள்

'ஓம்' என்ற பிரணவத்தைக் காட்டும் திருவாசியின் நடுவே தூக்கிய திருவடியுடன் நடன நாயகனான நடராசப் பெருமான் நடனம் ஆடுகின்றார். பஞ்சகிருத்தியங்களும் இந்நடனத்துள்ளே அடங்குகின்றன. உலகில் சகல ஜீவராசிகளும் அவரால் அனுக்கிரகிக்கப்படுகின்றன. பெருமானின் திருநடனமே உலகை இயக்குகின்றது. சிவாலயங்களில் நடராசப் பெருமான் சிவகாமசௌந்தரி அம்பிகையோடு தெற்கு நோக்கி வீற்றிருப்பதைக் காணலாம். நடராசத் திருக்கோலம் தெற்கு நோக்கித் திருநடனம் புரிதல், உயிர்கட்குத் தெற்கிலிருந்து வரும் யமனால் யாதொரு துன்பமும் இல்லாமல் காத்தற் பொருட்டும், தென் தமிழையும், தமிழர் பக்தியையும் விரும்பியிருத்தலுமாகும்.

தமிழகத்தின் இதயக்கனியாகத் திகழும் தில்லைச் சிதம்பரம், பஞ்சபூதத் தலங்களில் ஆகாயத் தலமாக விளங்குகிறது. அங்கு திருநடனம் புரிகின்ற நடராசப்பெருமான் அற்புதமானதும் வியாக்கிரபாத முனிவரும், பதஞ்சலி முனிவரும் இருமருங்கிலும் தொழுதேத்த ஐம்பத்தியொரு சுடர்களைக் கொண்ட வட்டத் திருவாசியுடன் கூடிய பல தத்துவங்களை உள்ளடக்கித் திகழ்வது.

எம்பெருமானின் கவின்மிக்க திருமுகமண்டலம், பனித்தசடை, புனித கங்கை, பிறைமதி, குனித்த புருவம், குமிண்சிரிப்பு, பவளமேனி, பால் வெண்ணீறு, நெற்றிக் கண், நீலகண்டம், உடுக்கை, நெருப்பு, அமைந்த கரம், வீசியகரம், தூக்கிய திருவடி, ஊன்றிய திருவடி, முயலகன் இவையெல்லாம் இத்திருக்கோலத்தின் திருக்காட்சி.

பனித்த சடை சிவநெறிக்குரிய தவ ஒழுக்கத்தின் சிறப்பைக் குறிப்பது. கங்கையைத் தரித்தல், எம்பெருமானது பேராற்றலையும், வேகம் கெடுத்தாளும் வித்தகத்தையும் குறிக்கும். பிறைமதி அணிந்திருத்தல், தன்னை அடைந்தவரின் தாழ்வை நீக்கிப் பாதுகாக்கும் பேரருள் திறத்தைக் குறிக்கும்.

குனித்த புருவம், அடியார்களின் விண்ணப்பங்களைக் கூர்ந்து கேட்டருளும் கருணைத் திறத்தை உணர்த்தும் குமிண் சிரிப்பு அடியார்களின் பிழைகளை மன்னித்து வாழ்வளித்து மகிழ்விக்கும் மாண்பினைக் குறிக்கும்.

பவளமேனி இறைவன் தீவண்ணன் என்பதையும் அடியார்களின் மாசுகளையெல்லாம் போக்கித் தூய்மைப்படுத்தி அருள் புரிதலையும் உணர்த்தும்.

பால் வெண்ணீறு, எம்பெருமானது அழியாத தன்மையினையும் நெற்றிக் கண் தனிப்பெரும் முதன்மையினை உணர்த்துவதாகும். நீலகண்டம் தேவர் அமுது உண்டு வருந்த எவரும் உண்ணாத நஞ்சை உண்டு இன்னருள் புரியும் இறைவனின் நயத்தகு பெரு நிலையினை உணர்த்தும். உடுக்கை ஏந்தியிருத்தல், ஒலியை எழுப்பி அணுத்துகள்களைத் திரட்டி உலகப் பொருட்களைப் படைக்கும் நோக்கத்துடன் பரநாதத்தைத் தோற்றுவிக்கும் பான்மையினை உணர்த்துவது. நெருப்பை ஏந்தியிருந்தல், பிறந்தும் இறந்தும் வருந்தும் பான்மையினை இளைப்பினை நீக்கும் பொருட்டுச் செய்யும் அழித்தல் தொழிலின் அடையாளமாகும். அமைத்தகை எம்பெருமானின் காத்தல் தொழிலைக் காட்டுவது. வீசிய கரம், தூக்கிய திருவடியைக் காட்டி நிற்றல் இத்திருவடியை தொழுதால் ஈடேற்றும் என்னும் உண்மையை உணர்த்துவது. இடது திருவடியாகிய எடுத்த திருவடி அம்மையின் பகுதிக்குரியது. இத் திருவடி பிறவிக்கடலில் வருந்தும் உயிர்களைக் கரையேற்றிக் காப்பாற்றும் அருளல் தொழிலைக் குறிக்கும். வலது திருவடியாகிய ஊன்றிய திருவடி முயலகன் என்பவனை மிதித்திருத்தல், அம்முயலகனை மிதித்து அழித்துவிடாமலும், மிதிக்காமல் விட்டு விடாமலும் மெல்லென எம்பெருமான் நிற்கும் நிலையாகும். இந்நிலை இறைவன் உயிர்களின் மலத்தை முழுதாக அழிந்துவிடாமலும், மலத்தால் உயிர்கள் வருந்தாமலும் வினைப்பயன்களை நுகரச் செய்ய இயற்றும் மறைத்தல் தொழிலைக் குறிக்கும். ஊன்றிய திருவடியின் கீழ் உள்ள முயலகன் ஆணவ மலத்தின் அடையாளம் ஆணவமலம் என்றும் அழிவதில்லை. அதுபோலவே முயலகனும் இறைவன் திருவடிக்கீழ் விளங்குகின்றான்.

நடராசப்பெருமானின் திருக்கோலம் உடுக்கையால் ஆக்கல் தொழிலையும், ஏந்திய நெருப்பால் அழித்தல் தொழிலையும், அமைத்த கரத்தால் காத்தல் தொழிலையும், ஊன்றிய திருவடியால் மறைத்தல் தொழிலையும் தூக்கிய திருவடியால் அருளல் தொழிலையும் உணர்த்துகின்றது.

> ''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
> பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
> இனித்த முடைய எடுத்த பொற்பாதமுங் காணப் பெற்றால்
> மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மானிலத்தே''

எனத் திருநாவுக்கரசுநாயனார் நடராசப்பெருமானை விதந் துரைக்கின்றார்.

''உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்''

என்று திருப்புராணம் எடுத்துரைக்கின்றது.

தினகரன்
12-06-98

---

இருதலைக் கொள்ளியினுள் எறும்பொத்து நினைப்பிரிந்த
விரிதலையேனை விடுதிகண்டாய் வியன் மூவுலகுக்கு
ஒருதலைவா மன்னும் உத்தரகோச மங்கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வலனேந்திப் பொலிபவனே.

பொலிகின்ற நின்றாள் புகுதப்பெற்று ஆக்கையைப் போக்கப்பெற்று
மெலிகின்ற என்னை விடுதிகண்டாய் அளிதேர்விளரி
ஒலிநின்ற பூம்பொழில் உத்தரகோச மங்கைக்கரசே
வலிநின்ற திண்சிலையால் எரித்தாய் புரம்மாறுபட்டே.

---

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாரொடு நோகேன் யார்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலையானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரியாயே.

# திருவாதிரையும் மார்கழி மகிமையும்

வருடந் தோறும் மார்கழி மாதம் தெய்வ சிந்தனைகளும், இறை வழிபாடுகளும் மிகுந்து காணப்படும் காலம். இம் மாதம் பூரணையும் திருவாதிரையும் சேர்ந்து வரும்காலம் திருவாதிரை யாகும். இதற்கு முன்னுள்ள பத்து நாட்களும் திருவெம்பாவைக் காலமாகும். இதனை "பாவை நோன்பு" என்று கூறுவதுமுண்டு. திருவாதிரை நட்சத்திரம் சிவபெருமானுக்குரியதாலும், விசேடங் கள்யாவும் சிவனுக்கு செய்யப்படுகின்றன. எனினும் கன்னியர்கள் மழை வளம் குறித்தும், சிறந்த கணவரைப் பெறும் பொருட்டும் கார்த்தியாயினி என்னும் சக்தியைக் குறித்து மார்கழி முழுவதும் விரதம் அனுட்டித்து வருவதனால் சக்தி வழிபாட்டுக் காலமாகவும் கருதப்படுகிறது.

மாணிக்கவாசக நாயனாரது திருவெம்பாவைப் பாடல்களிலி ருந்து அவர் காலத்தும் இந் நோன்பு மார்கழி நீராடல் என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளது. அதன் பின்னர் திருவெம்பாவைத் திருப்பதிகம் ஆண்டுதோறும் சிவாலயங்களில் இப் பாவை நோன்பு காலத்தின் போது படிக்கப்பட்டது. பின்னர் பாவையர் நோன்பு என்னும் பெயரும், மார்கழி நீராடல் என்னும் பெயரும் வழக்காற் றில் சிறிது சிறிதாக மறைந்து "மார்கழித் திருவெம்பாவை" என் னும் சிறப்புப் பெயருடன் வழங்கப்படலாயிற்று. இப் பாவையர் நோன்பு தமிழ் நாட்டின்கண் பண்டுதொட்டு உருவான தமிழ் வழிபாட்டியல் ஆகும். மாணிக்கவாசக சுவாமிகள் இறைவன் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவதலங்கள் தோறும் சென்று தரிசித்து திருவண்ணாமலையை அடைந்து அங்கு எழுந்தருளி யிருக்கையில் திருவெம்பாவைக் காலமாகிய அக் காலத்தில் அங்குள்ள கன்னியர்கள் விடியற்காலம் எழுந்து இல்லங்கள் தோறும் சென்று மற்றைய பெண்களையும் எழுப்பி ஆடிப்பாடி நீராடிச் செல்லும் காட்சியைக் கண்டார். அவர்கள் வேண்டுதல் செய்வதனைக் கண்டு, அவர்கள் கருதும் பொருளும் சைவ சமயம் உண்மைப் பொருளும் அமையப் புகன்றதாக இத் திருவெம்பாவையை அருளிச் செய்தார். இவ் வண்ணம் எழுந்த பாவைப் பாட்டு இதோ வீதி வாய்க் கேட் கிறது. ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதியை அவர் கள் புகழ்ந்து பாடுகிறார்கள். ஆணவக் காரிருளில் அழுந்தி உறங்கா மல் அருள் வெள்ளத்தில் நீராட வருக என அழைப்பதே திருவெம்

பாவையின் உட்பொருள் என சைவப் பெரியோர்கள் விளக்கம் சொல்லுவார்கள். நாடு மழையால் நலம் பெறவேண்டும். வீடு சிறக்க கணவனால் வளம் பெற வேண்டும். என நாடும் வீடும் செழித்தோங்கப் பாடும் பாவையர், பொய்கையருகே கூடிப் பரவுகின்றனர்.

உலகின் எல்லாப் பொருளுக்கும் முதலும் முடிவும் உண்டு. தோற்றமும் இறுதியும் உண்டு. எல்லாப் பொருளும் தோன்றவும் மறையவும் இடந் தருகின்ற சொல்லமுடியாத பெருமை பூண்ட பொருளாகிய, இருள் நீக்கித் தெளிவும் ஒளியும் ஊட்டுகின்ற பேரொளிப் பிழம்பாகிய சோதியின் நலங்களை உன் தோழியராகிய நாங்கள் பாடிப் பரவுகின்றோம். மணிவாசகர் இறைவனை முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள் எனவும் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியன் என்றும் கூறுகின்றார். அடிகள் அருளிய மாணிக்கத் தமிழின் மணியான தொடர்கள் இவை.

> ''முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
> பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
> உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
> உன்னடியார்தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
> அன்னவரே எங்கணவராவார் அவருகந்து
> சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
> இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
> என்ன குறைவு மிலோம் ஏலோர் எம்பாவாய்''

## திருவாதிரை திருநாளின் சிறப்பு

மார்கழி மாதம் தான் விண்ணுலகின் உதயகாலம். ஆடி மாதம் முதல் மார்கழி வரையிலான ஆறு மாதங்கள் தேவர்களுக்கு இரவாகவும் தை முதல் ஆனிவரையிலான ஆறு மாதங்கள் பகலாகவும், அவர்களுக்கு உள்ளன. மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற்கால நேரம். தூக்கம் விழித்தெழுந்து மனதில் எவ்விதமான சலனமும் இன்றித் தெளிவாக இருக்கும் நேரமே வைகறைப் பொழுதாதலின் தேவர்களும் இறைவனை வழிபட்டு வணங்குவர். மனிதர்களாகிய எமக்கு அக்காலமே சாலச் சிறந்தது என்பதாலேயே மார்கழி மாதம் புனிதத் தன்மை பொருந்தியதாகிறது. பழமை வாய்ந்த நூலாகிய பரிபாடலில் மார்கழியின் சிறப்பினையும் ஆதிரையின் பெருமையினையும் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

''சிறப்பு வாய்ந்த மார்கழி மாதத்தில் முழு நிலாக்காலமாகிய பூரணையைப் பொருந்தி வரும் திருவாதிரைத் திருநாளில் மெய் நூலாகிய வேதங்களை நன்கு உணர்ந்த அறவோர்கள் திருவாதிரைக்குரிய தெய்வமான சிவபெருமானுக்குத் திருவிழாவைச் செய்ய,

அவ்விழாவில் முப்புரி நூல் அணிந்த அந்தணர்கள் சிவனுக்குரிய வழிபாட்டுப் பொற்கலங்களை ஏந்துவர். இப் பூமியானது சூரிய வெப்பத்தால் பாதிப்படையாது. மழையினால் குளிர்ச்சியடைவதாக என்று வாழ்த்தி 'அம்பா ஆடல்' என்னும் விரதத்தை அனுட்டிக்கும் கன்னிப் பெண்கள் விரதமுறைகளை தன்குணர்ந்த முதிய பெண்களின் உதவியோடு பனிநிறைந்த விடியற்காலையில் நீராடுவர்''

பரிபாடலில் கூறப்பட்ட அம்பா ஆடல் என்பதே ''பாவை நோன்பு'' என்பதாகும். கன்னிப்பெண்கள் ஒருவரையொருவர் துயிலெழுப்பி ஆற்றங்கரை சென்று நீராடி உலக மாதாவாகிய உமையம்மையை வழிபாடு செய்வதாகும். இவ்வுண்மையை திருவாதவூரடிகள் புராணச் செய்யுள் பின்வருமாறு கூறுகிறது.

''மாதர் கொள் மாதரெல்லாம் மார்கழித் திங்கள் தனில்
ஆதிரை முன் னீரைந்தே ஆகிய தினங்கள் எல்லாம்
மேதரு மனைகள் தோறும் அழைத் திருள் விடிவதான
போதிவர் தம்மிற் கூடி புனற்றடம் ஆடல் செய்வார்''

மார்கழி திருவாதிரை தழுவிய பத்து நாட்களும் தினமும் அதிகாலையில் இந் நீராடல் நிகழ்த்தப்படுவதால் இதனை ''மார்கழி நீராடல்'' என்று சிறப்பித்துக் கூறுவர். திருவாதிரை நட்சத்திரம் சிவபெருமானுக்குரியதாலும் வழிபாடுகள் யாவும் அவனுக்கே செய்யப்படுகின்றன. எனினும் கன்னிப்பெண்கள் மார்கழி நீராடி உமையம்மை சக்தியைக் குறித்து மார்கழி முழுவதும் நோன்பு நோற்று வருவதனால் சக்தி வழிபாட்டுக் காலமாகவும் கொள்ளப்படுகிறது.

திருவென்னும் அடைமொழி பெற்றவற்றுள் ஆதிரை தனிச்சிறப்புடையது. அது திருவாதிரை எனப் போற்றப்படுவது. அதனாலேயே ''ஆதிரையான்'' என அழைக்கப்படும் சிவனோடு சேர்த்து பெருமை கொடுத்து ''திரு ஆதிரையான் எனப் போற்றுகிறோம். திருவாதிரை நாளைப் பெருவிழா நாளாகக் கொண்டாடி ''கார் வருவதை தருசோலைக் கபாலீச்சரமர்ந்தலின் ஆதிரை நாள்'' என்று திருஞானசம்பந்தர் போற்றுகிறார். நாவுக்கரசர், சேந்தனார் ஆகியோரும் போற்றிப் பாடியுள்ளனர். இதனைச் சேக்கிழார் சுவாமிகள் ''திருவாதிரை திகழ்செல்வம்'' என்பர்.

இக்காலத்தில் நடைபெறும் உற்சவத்தை ''ஆருத்திரா தரிசனம்'' என்று வழங்குவதுமுண்டு. ஆருத்திரை என்ற சொல்லுக்கு நனைந்த என்றும் பொருள்படும். மார்கழி பனிகொட்டும் மாதம். ஆதிரை

விழாவின் அபிஷேகச் சிறப்புக்கும் அப்பெயர் பொருந்தும். ''ஆருத்திரா'' என்றால் சிவந்த நிறம் என்றும் பொருள்படும். திருவாதிரையின் ஒளி சிவசோதி போன்று நிலவக் கண்டு அதனைப் போற்றினர். சிவநடனம் சிறப்பாக நடைபெறும் நாட்களுள் திருவாதிரையும் ஒரு நாளாகும். அதுவே ஆருத்திரை தரிசன நாளாகும்.

மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையைப் போன்று தமிழ்ச் சுவை ததும்பும் ஆண்டாள் பாடிய திருப்பாவையின் மூலமாக வைணவப் பெண்களும் மார்கழி மாதத்து பௌர்ணமியிலே இந் நோன்பை கைக்கொள்கிறார்கள். இதனை

> ''மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால் நீராடப்
> போதுவீர் போது மினோ நேரிழையீர்''

என்று ஆண்டாள் பாடியுள்ளார். இவருடைய பாடல்கள் மூலமாக மார்கழி நீராடல் பாவையர் நோன்புடன் தொடர்புள்ளது என்பது தெரியவருகிறது.

''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி நாங்கள் நம் பாவைக்கு சாற்றி நீராடினால்'' என்னும் அடிகளால் மேலும் உறுதியாகின்றது.

இப்படி கன்னியர் நோற்று வந்த இப்பாவையர் நோன்பும், அதனோடு தொடர்புடைய இறைவழிபாடும் மாணிக்கவாசகரின் திருவெம்பாவையிலும், ஆண்டாளின் திருப்பாவையினாலும் மேலும் தெய்வீகப் பொலிவினையும், உணர்வினையும் பெற்றது. சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை விழா நாளின் போது நடராசப்பெருமானை ஏற்றி திருவுலாச் சென்ற தேர்ச் சில்லுகள் பூமிக்குள் அழுந்தி அசையாதிருக்க அதனைக் கண்டு சேந்தனார் திருப்பல்லாண்டு எனும் பதிகம் பாடி அத்தேர் இயல்பாக அசைந்து ஓடியது என்று குறிக்கப்பட்டுள்ளது.

சோழர் காலத்து கல்வெட்டுகளின் மூலமாக, அவர்கள் காலத்தில் இத்திருவாதிரை விழா திருக்கோயில்களில் சோழ மன்னர்களின் ஆதரவுடன் சிறப்புற நடைபெற்றதை அறியலாம். அவ்வாறே பாண்டிய மன்னர்களின் ஆட்சியின் போதும் இவ்விழா நிறைவுடன் நடைபெற்றது என மேலும் கல்வெட்டுக்கள் மூலம் அறியக் கிடக்கிறது. ஆகவே மார்கழி வைகறையில் நீராடிப் பாவைப்பாட்டு இசைக்கும் பண்பாடு தமிழ் கூறும் நல்லுலகத்தே வழிமுறையாக இருந்து வந்துள்ளது. அத்துடன் திருவெம்பாவை, திருமந்திரம் முடியுடை மூவேந்தர் முடிசூட்டு விழாவிலே ஓதப் பெற்று வந்தது. கங்கை கொண்ட சோழன் காலத்திலே இவ்வழக்கம் கீழ்நாடு எங்கணும் பரவியது. இன்றும் சீயம் தேசத்தில் முடிசூட்டு விழா முதலிய அரசியற் சடங்குகள் திருவெம்பாவையை ஓதியே ஆரம்பிக்கப் பெறுகின்றன.

எல்லாம் வல்ல இறைவனுக்கும் திருவெம்பாவை திருப்பாடல்களின் ஈடுபாடு அதிகம். திருச்சிற்றம்பலக் கோவையைப் பாடுவிக்க திருவுளங் கொண்டபோது ஏனைய திருப்பதிகங்களை எடுத்துக் கூறாது ''பாவை பாடிய வாயால் கோவையும் பாடுக'' என்று திருவாய் மலர்ந்தருளியதிலிருந்து இது தெரிகின்றது. மணிவாசகப் பெருமான் பண்டு தொட்டு வழங்கி வந்த பாவைப்பாட்டின் பொருளோடு சைவசமய உண்மைப் பொருளையும் சேர்த்து உரையாடல் முறையாகவும் வாழ்த்தி வணங்கும் முறையாகவும் திருவெம்பாவையைப் பாடியருளியுள்ளார். இவ்வேளை இப்பாமாலையை இறைவன் முன்னிலையில் பக்தியுடன் பாடும்போது யுத்தம் போன்றதீயவை அகன்று சமாதானம், அன்பு, தியாகம், நட்பு, மானுட மேம்பாடு எனும் பெருந்தன்மைகளால் உலகு மனிதர்கள் வாழும் சிவபூமியாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. சைவசமயிகளாகிய எல்லோரும் அதிகாலை எழுந்து மார்கழித் திருவாதிரைக்கு முன்னுள்ள பத்து நாட்களும் திருவெம்பாவை பாடியும், திருவாதவூரடிகள் புராணத்தைப் படித்தும், கேட்டும் இறைவனை வேண்டுதல் செய்தும் மார்கழிப் பிள்ளையாரை வைத்து பூக்கள் சூடி வழிபட்டு வந்தால் தமிழ் மக்களுக்கு எல்லாவிதமான நன்மைகளும் கிடைக்கும் என்பது உறுதியாகும்.

''அருள்வாத வூரர்சொல அம்பலவர் தாமெழுதும்
திருவாசகத்தைத் தெளிந்தால் கருவாம
பவகதியும் நீங்கிப் பரமருளாலே
சிவகதியும் உண்டாம் சிவம்''

தினகரன்
20-12-98

---

வம்பனேன்தன்னை ஆண்டமாமணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பருமறியா ஒருவனே இருவர்க்கு
உணர்விறந்து உலகமுடுருவும்
செம்பெருமானே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
எம்பெருமானே என்னையாள்வானே
என்னைநீ கூவிக் கொண்டருளே.

# சலனமிலாச் சங்கரன்

''நலமிலன் நண்ணார்க்கு, நண்ணினர்க்கு
நல்லன்
சலமிலன்; பேர் சங்கரன்''

என்பதாக உமாபதி சிவாச்சாரியார் அருளிய 'திருவருட் பயன்' என்ற சித்தாந்த சாத்திர நூலின் ஒருகுறள் வெண்பா கூறுகிறது. தன்னை வந்து அடைந்தவர்க்கு இறைவன் நன்மை செய்கிறான் என்றும், தன்னை நண்ணாதவர்க்கு அவன் நன்மை செய்வதில்லை என்றும் இக்குறட்பா முதலடியின் கருத்து அமைகிறது. இரண்டாமடியில் உள்ள 'சலமிலன்' என்பதற்கு இறைவன் எவ்வித சலனமும் இல்லாதவன். அதாவது விருப்பு வெறுப்பு அற்றவன் என்பது பொருள். முடிவாக அத்தகைய இறைவனின் பெயர் 'சங்கரன்' என்றுங் கூறப்படுகிறது. சங்கரன் என்றால் சுகத்தைச் செய்பவன் என்று பொருள்.

இறைவன் தன்னை அடைந்தவர்க்கு நன்மை செய்கிறான். அடையாதவர்க்கு அவனால் நன்மை இல்லை என்ற கருத்தும், அவன் விருப்பு, வெறுப்பு இல்லாதவன் என்ற கருத்தும் உண்மையில் முரணானவையே அல்ல. இதனை ஓர் அருமையான உவமை மூலம் விளக்குவார்கள் பெரியவர்கள்.

உடலை உறைய வைக்கும் பனி பொழிந்து கொண்டு இருக்கிறது. உயிரே போய்விடுமாறு எல்லோரும், உடல் விறைத்துத் துன்புறுகிறார்கள். தூரத்தில் எங்கோ ஓரிடத்தில் நெருப்பு எரிந்தபடி இருக்கிறது. சிலர் சென்று அந்த நெருப்பின் கதகதப்பிற்குளிர் காய்கிறார்கள். பலர் சோம்பல் மிகுதியினால் அதனை ஏறெடுத்தும் பார்க்கிறார்கள் இல்லை. நெருப்பை அடைந்தவர்க்குக் குளிராகிய துன்பம் போய் விட்டது. நெருப்பை அடையாதவரின் துன்பம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நெருப்பு எல்லோருக்கும் பொதுவாக எரிவது போல இறைவனும் பொதுவாக எல்லோருக்குமாகவே அருள் சொரிந்து நிற்கிறான். அடைந்தவர்களுக்கு இன்பம், அடையாதவர்களுக்குத் துன்பம், மற்றும்படி அவனுக்கு எவ்வித சலனமும் இல்லை. அவன் சலமிலன்.

எல்லோர்க்கும் எப்போதும் சுகம் செய்து கொண்டே இருக்கிறான். அவன் சங்கரன்; விருப்பு, வெறுப்பில்லாத சங்கரன். எல்லாம் வல்ல இறைவன் நம்மால் எட்டி அறியவோ அடையவோ

முடியாதவன். மனம், மொழி, மெய்களுக்கு அப்பாற்பட்டவன். அவனை அடைந்தால் தான் பிறவிப்பிணி அறுத்துப் பேரின்பம் பெறலாம். இறைவன் அருளே வடிவானவன். உயிர்கள் இருக்கும் இடம் தேடிவந்து, அவன்தன் திருவடியைக் காட்டி 'தன்னிடம் அன்பு கொண்டு நின்றால் பிறவிப்பிணி நீங்கிப் பேரின்பம் பெறலாம்' என்று உணர்த்துகிறான். அன்பர்க்கு அவன் மிகவும் இனியவன் என்பதும் மறை முடிவுகளின் கருத்தேயாகும். அது அன்பு நெறி நிற்பார்க்கு உணர்த்தப்பட்ட உண்மையாகும். அன்புநெறி அது பற்றி நின்று பிறவிப்பிணி அறுத்து பேரின்பம் பெற்றவர்கள் அடியார்கள். அவர்கள் தாங்கள் பெற்ற பேற்றை செந்தமிழ்ப்பாக்களால் நம் பொருட்டு உணர்த்திச் சென்றிருக்கின்றனர். மறை முடிவுகளின் பிழிவாகக் கருதப்படும் அவர்கள் பாடல்களை ஓதியுணர்ந்து அன்பு நெறி பற்றி நிற்போமானால் நாமும் பிறப்புப்பிணியறுத்துப் பேரின்பம் பெறலாம்.

உலகில் உயர்ந்த மக்கட் பிறப்பைப் பெற்றுள்ள மனிதன் மனிதப் பிறப்பின் பயனை அடைய முயலவேண்டும். உலகில் வாழும் எல்லாப் பிறவிகளைக் காட்டிலும் மேம்பட்ட ஒருவன், அப்பிறவியின் பெரும் பயனாக விளங்கும் இறைவனை வழிபட வேண்டும். இது பற்றி திருமூலர் சிந்தனையையும் காண்போம்.

''பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி போனார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற்கரிய பேரிழந்தாரே''

என்பது திருமூலர் திருமந்திரம். உயர்ந்த குறிக்கோளை அடைவதற்கே உயர்ந்த பிறப்பு நமக்குத் தரப்பட்டுள்ளது. இந்த உயர்வோடு வாழ்பவரே மனிதராவார் என்று அப்பாடலுக்கு பொருள் காண்பது சிறப்புடையதாகும். மனிதப் பிறவி வேண்டுவதும் மகேசன் புகழ்பாடித் துதிப்பதற்கே ஆகும்.

சைவசமய வரலாற்றிலே காலத்துக்குக் காலம் தோன்றிய அருளாசிரியர்களும், அடியார்களும் சான்றோர்களும் அன்பினாலேயே சைவசமயத்தைக் கட்டிக்காத்து நின்றனர். அன்னவர்களால் அருளப்பட்ட ஞானப்பொதிகள் அன்பையே எமக்கு ஊட்டின. இன்னும் அவை மக்களிடையே நிலைத்து நின்று அருள் பாலிக்கின்றன. அருளாசிரியர்களையும் மக்கள் வாழ்த்தி வழிபடக்கூடிய அகத்தூய்மையை அருட்பாடல்கள் ஏற்படுத்தியிருக்கின்றன. ஆண்டவனின் அன்புக்கு அடிமைப்பட்ட அடியார்கள் அன்புதான் சிவம். சிவம் தான் அன்பு என்பதை எண்ணிப் பெருமைப்பட்டனர்.

*வீரகேசரி 10-7-99*

# மாயைப் பிறப்பை அழிக்கும் அரன் வழிபாடு

சிவபெருமானைப் போற்றும்போது பாவங்கள் தீரும். புண்ணியங்கள் சேரும். மாயப் பிறப்பை மீண்டும் அறுவடை செய்யாமல் அறுத்து அழிக்கும் அரன் வழிபாடு. சிவனை வழிபடுகிறவர்கள் சித்தியடைகிறார்கள். சித்தர் குழாமே சிவனை சிரமேற்றி வழிபட்டது. சிவசிவ என்பர் சித்தர். அந்தப் பெருமானை செம்பொற் சேவடியானை மாயப்பிறப்பறுக்கும் மன்னனை, தில்லைக் கூத்தனை, சிவனை, எம்பெருமானை நீங்கா நிலையான ஆலவாய் அழகனை, அழலெடுத்து ஆடும் அண்ணாமலையானை சேவித்து வாழ்வு வளம் பெற வேண்டியது பெரும் பேறாகும். உள்ளத்தின் உள்ளே கண்ணுக்குப் புலனாகாமல் கருத்தால் காணத் தெரிந்தவன் எங்கும் இருக்கும் இனிய பெரும் பெருமான் சிவபெருமான். சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால் அவன் அருளால், அவனை வழிபட்டு உய்வேன் என்று வாழ்கின்ற வாழ்வுதான் சிவவாழ்வு.

உண்ணாமுலை உமையாருடனும் ஒருசேர வந்து அடியார்க்கு சிவப்பெருநாள்களில் தரிசனம் கொடுத்து அருள்பவன். சிவபெருமானை இந்த நாளில்தான் வழிபடவேண்டும் என்று இறுதி கட்ட முடியாது. எல்லாக் காலங்களிலும் எல்லா நாட்களிலும் தலைவன் அவனே. சிவன் இல்லாக் காலம் அவக்காலம். மரணத்திலும் நினைக்கத் தக்கவன். மங்களத்திலும் போற்றத் தக்க ஒருவன் சிவன். சிவபெருமானை வழிபட சிறப்பு நாட்கள் இவை என்ற பெருமை உடையவைகள் இவைகள்: சோமவார விரதம், சிவராத்திரி, திருவாதிரை, பிரதோசம், ஆனிமாத திருமுழுக்காட்டு விழா, கேதார விரதம், உமாமகேசுர விரதம், சூல விரதம் போன்ற பல்வேறு சிறப்பு நாட்கள் சிவவழிபாட்டிற்கு ஏற்றவை. மற்றும் எல்லா நாட்களும் சிவவழிபாட்டிற்கு ஏற்றவைகளே.

சிவபெருமான் கருணைக் கடல் மார்க்கண்டேயனுக்கு ஆயுள் முடிந்தாலும் அவனுக்கு தீர்க்காயுள் தந்தவர். அவர் மூலம் அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்றான். ஒரு வேடன் வில்வ மரத்தில் ஏறி இலைகளைப் பறித்து லிங்கத்தின் மேல் போட்டதையும், பூசையாக ஏற்றுக்கொண்டு அவனுக்கு நெடுநாள் வாழ்வு அளித்தார். கல்லால் அடித்த அடியாரையும், அவர் உள்ளம் தன்னை

நேசிக்கிறது என்ற காரணத்திற்காக அவரை மற்றவர்கள் பூசிக்கும் வண்ணம் உயர்த்தி வைத்தார். தான் உலகத்தின் எல்லா உயிர்களிலும் உறைபவன் என்று எடுத்துக்காட்ட மாறன் கொடுத்த பிரம்படியை மற்றவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தார்.

எம் பெருமான் கயிலையங்கிரியில் இருந்துகொண்டு எல்லா உலகங்களுக்கும் இன்பத்தைத் தருகின்றார். அவருடைய சாந்தம் நிறைந்த மங்களமான தனுஸ், பாவம் நீங்கிய மோட்ச நிலையைத் தருவது இறப்பும் பிறப்பும் அற்ற பெருவாழ்வை அளிப்பது. சிவபெருமானை 'கிரிசந்தன்' என்று குறிப்பிடுவார்கள். இந்த வார்த்தை அவனுக்கு மிக உகந்த "ஸ்ரீ ருத்ரம் நமகம்" என்ற பகுதியில் வருகிறது. 'ந' என்ற எழுத்து 'நமசிவாயம்' என்பதைக் குறிக்கும்.

சிவனைப் போற்றுகின்றவர்கள் புண்ணியசாலிகள், சிவனைப் பூஜிக்கின்றவர்கள் யோகசாலிகள். சிவபெருமானை எப்பொழுதும் நினையுங்கள் அவன் திருவடியைப் பற்றுங்கள். நீங்கள் தான் கைலாயத்தின் நிரந்தர வாசிகள்.

சிவசிவ சங்கர ஹரஹர சங்கர.

தினகரன், 6-7-98

---

பாடிமால்புகழும் பாதமேயல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீயாண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஊடுவதுன்னோடு உவப்பதும் முன்னை
உணர்த்துவ துனக்கு எனக்குறுதி
வாடினேன்இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன்றருள் புரியாயே.

வல்லைவாளரக்கர் புரமெரித்தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ்கூத்தா சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எல்லைமூவுலகும் உருவிஅன் றிருவர்
காணும்நாள் ஆதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள்புரியாயே.

# மகா சிவராத்திரியில் லிங்கபூசை வழிபாடு தேடித்தரும் பயன்கள் பலகோடியாகும்

உலக வாழ் ஆன்மாக்களின் உள்ளத்திற்கு அமைதியையும், உடலுக்கு ஆரோக்கியத்தையும் கொடுத்து எடுத்த இப்பிறவியை இன்பமயமாக்குவது இறையுணர்வாகும். ''பக்தி வலையிற் படுவோன் இறைவன்'' அவன் அருளாலே அவனை வணங்க வேண்டும். அவன் அருளின்றி அணுவும் அசையாது. என்ற உண்மைகளை அறிந்து வாழ்ந்தால், வாழ்வில் ஒரு விதமான குறையும் நேராது. எனவே தான் இந்துசமயத்தில், எல்லாம் வல்ல இறைவன் உயிர்கள் உய்யும் பொருட்டு வேதம், சிவாகமம், சாத்திரங்கள் முதலியவற்றை அருளிச் செய்துள்ளான். அவற்றுள் விதித்தவற்றை மக்களாகிய நாம் செய்தல் வேண்டும். விலக்கியவற்றை நீக்க வேண்டும். இவ்வாறு இறைவனால் விதிக்கப்பட்டவற்றுள் ஒன்று சிவவிரதங்களை அனுஷ்டித்தல் என்பதாம். சிவவிரதங்கள் எட்டு என்று உபதேச காண்டம் கூறுகின்றது. இவற்றுள் மேலானது சிவராத்திரி விரதமாகும்.

''மணிநவ நிதியம் பூக்கும்
மாசிலாத் தெரு ளுண்டாக்கும்
அணிசிவ கருமந் தேக்கும்
அட்ட ஐசுவரியங் காக்கும்
பணிபுனை சுந்தர ரேசர்
பயிலுநோன்பு எவைக்கு மேலாம்
திணிதருத் தவத்தின் முன்னாஞ்
சிவ நிசி யென்னு மாதோ''

சிவன் என்றால் துக்கம், இன்னல், இடர் ஆகியவற்றை இல்லாமல் செய்து. மங்களத்தைக் கொடுப்பவன். சிவலிங்கத்திலிருந்தே அனைத்தும் தோன்றின. அது போலவே இறுதியில் லிங்கத்திலே எல்லாம் அடங்குகின்றன. படைப்பு, காப்பு, அழிப்பு ஆகிய யாவும் அதிலேயே அடங்கியுள்ளன. இராத்திரி என்றால் துக்கத்தைப் போக்கி சுகத்தைக் கொடுப்பது எனக் கொள்ளலாம். உயிர்கள் யாவும் செயலற்று நிற்கும் காலத்தில் சிவபெருமான் ஒருவரே செயலாற்றுவார். தேவி அவரைப்பூசனை செய்வாள். அந்த அகண்டாகாரமாகிய இரவே சிவராத்திரி எனப்படும். ஆகவே சிவனைப்

பூசிக்கத்தகுந்த இரவே சிவராத்திரி என்று சொல்லப்படுகிறது. மகா சிவராத்திரி எல்லா உயிர்களுக்கும் நல்வாழ்வைக் கொடுக்கின்றது என்பது தெளிவு.

சிவராத்திரி என்றால் நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி என விரிவடைகின்றது. மாதம் தோறும் தேய்பிறைச் சதுர்த்தசியில் வருவதுமாத சிவராத்திரி. மாசி மாத கிருஷ்ணபட்ச சதுர்த்தியில் வருவதுதான் மகாசிவ ராத்திரியாகும். எனவே தான் இத்தினத்தில் வரும் மகாவிரத மாகிய சிவராத்திரியை முறைப்படி அனுட்டித்து பாவங்களை நீக்கிக் கொள்வதோடு, மனதில் சாந்தியையும் அமைதியையும் பெற்று நல்வாழ்வு பெறவேண்டியது ஒவ்வொருவருடைய தலையாய கடமை யாகும். அப்பர் சுவாமிகள் மகா சிவராத்திரி பற்றித் தமது திருப் பதிகத்தில் எடுத்து ஓதுகின்றார்.

''செங்கணானும் பிரமனும்
தம்முள்ளே எங்கும்
தேடித் திரிந்தவர்
காண்கிலார்
இலிங்கத்தே
தோன்றினான்
பொங்கு செஞ்சடைப்
புண்ணிய மூர்த்தியே''

ஆகவே சிவராத்திரியே தலைசிறந்த உண்மையான விரதமாகும். இதுவே உயிர்க்கு உற்ற துணையாகவும், மோட்சத்தின் திறவு கோல் என்றும் சைவ அறிஞர்கள் கருதுகின்றனர்.

சிவராத்திரியின் ஆதிவரலாறு பற்றிக் கூறும் போது கந்தபுரா ணம், தட்சகாண்டம் அடிமுடிதேடு படலத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. பிரமதேவன் தட்சனுக்கு கூறியது.

''அரியும் யானும் முன்
தேடுமவ் வனற்கிரி யனல
கிரியெனும்படி நின்ற தால்
அவ்வொளி கிளர்ந்த
இரவதே சிவராத்திரி
யாயினது இறைவற்
பரவி யுய்ந்தனர் அன்னதோர்
வைகளிற் பலரும்''

திருமால் பிரமனுக்கிடையே ஏற்பட்ட செருக்கை அடக்க திருவுளம் கொண்ட சிவன் சோதிப்பிழம்பாகத் தோன்றி காட்சி நல்கினார். அடிமுடி காணாத அவர்களின் அகம்பாவத்தை ஒழித்து இலிங்கோற்பவராக காட்சி கொடுத்தார். இருவரும், ஏனைய உயிரினங்களும் சிவனைத் துதித்து பேறு பெற்றனர். இந்நாளே மகாசிவராத்திரி என்று நாமம் பெற்று சிறப்பிக்கப்படுகிறது.

மற்றுமொரு புராணக்கதையில் சிவராத்திரியின் வரலாறு இவ்வாறு எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. திருக்கயிலாயத்தில் ஒருமுறை உமையம்மை, சிவபெருமானது இரண்டு கண்களையும் விளையாட்டாகப் பொத்தவே உலகம் முழுவதும் இருளடைந்தது. எல்லா உயிர்களும் ஒடுங்கிக் கிடந்தன. எஞ்சி நின்றவர்

சிவபெருமானும், அவரை விட்டு என்று நீக்காது விளங்கும் சக்தியாகிய உமாதேவியாருமாம். அந்த இரவில் நான்கு ஜாமங்களிலும் உயிர்கள் உய்தி பெற தேவியார் விதிப்படி பூசித்தார். மீண்டும் உலக சிருட்டி ஏற்பட்டது. இது விடியற்காலம். அதே சமயம் தேவியார் இறைவனை வணங்கி, அவ்விரவைச் ''சிவராத்திரியாகக் கொள்ளுமாறு வேண்டினார். மேலும் அந்நாளில் இறைவனை விதிப்படி பக்தி சிரத்தையுடன் பூசிக்கும் உயிர்களுக்கு எல்லாவிதமான நன்மைகளையும் அருள வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார். இதுவே சிவராத்திரியின் ஒரு வரலாறாகும்.

## நான்கு ஜாமப் பூஜை வழிபாடு

சிவராத்திரியன்று இரவு சிவ வழிபாடு இன்றியமையாத ஒன்றாகும். சிவாலயங்களில் நான்கு ஜாமப் பூஜைகளும் சிறப்புற இடம் பெறும். அன்று முழுவதும் உபவாசமாக இருந்து மறுநாள் அதிகாலை பாறனை செய்தல் வேண்டும். நான்கு ஜாமப் பூஜையும் அவ்வக் காலத்தில் செய்வது உத்தமம். இக்காலங்களில் நித்திரையின்றி சிவபூஜை செய்தல் வேண்டும். சிவபூசையில்லாதவர் சிவத்தலத்துக்' குச் சென்று பஞ்சாட்சர செபமுஞ், சிவபுராண சிரவணமும் செய்து சிவபெருமானை தரிசனம் பண்ணல் வேண்டும். விரதம் அனுட்டிக்கும் முறை பற்றி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், தமது சைவ வினாவிடை இரண்டாம் புத்தகத்தில் காலையில் எழுந்து நித்திய கடன்களை முடித்து நீராடி சிவாலயத்திற்குச் சென்று பெருமானை வழிபட்டு அவன் புகழ்பாடும் அருட் பாடல்களைப் படித்து, உண்டியின்றியிருத்தல் வேண்டும். பின்பு மாலையிலும் நீராடி நாலு சாமங்களிலும், விதிப்படி சிவபூசை செய்தல் வேண்டும். சிவபூசையில்லாதவர்கள் சிவாலயத்திற்குச் சென்று சிவபெருமான் அபிஷேகம்,

அலங்காரம், நிவேதனம் முதலியவற்றிற்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து உறக்கமின்றி நாலு சாமங்களிலும் பெருமானை வணங்கி வழிபட்டு, மறுநாள் விடியற்காலையிலும் நீராடி நித்திய கடன் களை முடித்துக் கொண்டு அடியார்களுடன் பாரணம் செய்தல் வேண்டும்.

## லிங்கோற்பவர் முகூர்த்தம்

சிவபெருமான் சிவலிங்கத் திருமேனியில் ஜோதியாக தோன் றிய முகூர்த்தம் லிங்கோற்பவர் முகூர்த்தமாகும். இது இரவு 11-30 முதல் 12-15 வரையுள்ள காலமாகும். சிவாலயப் பின் பிர காரத்தில் நேர் மேற்கு தீர்க்க விருத்தமாக அதாவது வட்டவடிவ மாக அமைந்துள்ளதே லிங்கோற்பவ மூர்த்தியாகும். இங்கே தான் ஆதியும், அந்தமும் இல்லாத அரும் பெரும் மூர்த்தியாக இருக்கி றார். பெருமானின் பாதமும் உச்சியும் காட்டப்படுவதில்லை. இதன் மூலம் முதலும் முடிவுமற்ற நிலையில் அவர் இருப்பது காட்டப்படு கிறது. இதில் புராணக்கதையை விளக்கும் வகையில் லிங்கம் அதில் தோன்றும். அவரை வழிபட்டு அருள் பெறும் பிரமன், திருமால் ஆகிய மூர்த்திகள் அவதாரமான பன்றி, அன்னம் ஆகிய வடிவங் களைக் கொண்டிருப்பதால் இம் மூர்த்தம் லிங்க புராணதேவர் என் றும் அழைக்கப்படுகிறார். பொதுவாக லிங்கோற்பவ மூர்த்தியில் உள்ள சிவபெருமான் நான்கு கரங்களுடன் மான், மழு, அபய, ஊரு முத்திரைகள் கொண்டவராக இருப்பர். சிவாலயங்களில் கரு வறையின் பின் மாடத்தில் லிங்கோற்பவரை அமைப்பது இன்றும் சிறப்புடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

சிவராத்திரியின் மூன்றாம் கால சாமப் பூசையில் மூர்த்திக்கு நெய்பூசி, வெந்நீரால் அபிஷேகம் செய்து கம்பளித் துணிகள் அணி வித்து தாழை மடல்களால் அலங்கரித்து எள்ளன்னம் நிவேதிக்க வேண்டும் என்பது சாஸ்திர முறையாகும். நான்கு சாமமும் நித்திரை யொழிக்க இயலாதவர், லிங்கோற்பவ காலம் நீங்கும் வரையுமாயி னும் நித்திரை யொழித்தல் வேண்டும். இக் காலத்தில் சிவதரிசனம் செய்வது மிகச் சிறந்த புண்ணியமாகும்.

## விரதப் பலன்கள்

மகா சிவராத்திரி விரதத்தை இருபத்துநான்கு அல்லது பன்னி ரெண்டு வருடங்களுக்கு தொடர்ந்து அனுஷ்டித்தால் சிறந்த பெறு பேறுகளைப் பெறலாம். இத்தினத்தில் நான்கு சாமத்திலும் கண் விழித்து மனத்தைக் கட்டுப்படுத்தி ஒரு நிலைப்படுத்தி சிவனோடு ஐக்கியப்படுத்தி தியானத்திலும் பூஜை வழிபாடுகளிலும் ஈடுபட

வேண்டும். இதனால் ஏற்படும் பயன் கோடானுகோடியாகும். சிவ ராத்திரி என்று அறியாமலே இறைவனைத் துதித்து ஞானம் பெற்றவர்களும் இருக்கிறார்கள். புலியின் பிடியில் இருந்து தப்பித்துக் கொள்ள வில்வம் மரத்தில் ஏறிய வேடன், தூக்கம் வராமல் இருக்க சிவராத்திரி நான்கு சாமங்களிலும் வில்வம் இலைகளை கீழே போட்டான். அவன் போட்ட வில்வம், அம்மரத்தடியில் இருந்த ஒரு சிவ லிங்கத்தின் மீது விழுந்தது. இந் நிகழ்ச்சி நடைபெற்ற இரவு சிவ ராத்திரி ஆகையால், அந்த வேடன் போட்ட இலைகள் வில்வ அர்ச்சனை போல் இருந்ததினால், அவ்வேடன் ஆண்டவன் கிருபை பெற்றான் என்பது வரலாறு. ஆகவே மகா சிவராத்திரியான புண்ணிய தினத்தில் இரவில் கண் விழித்து, எம்பெருமானை நினைந்து உருகி அவனிடம் அடங்கி ஐக்கியப்படுவதை விட வேறு ஆனந்தமே இல்லை. சிவபெருமானின் அருளைப் பெற இதுவே சிறந்த வழியுமாகும். எனவே இச்சிவராத்திரி தினத்திலே நான்கு சாமமும் நித்திரையொழிக்க இயலாவிடினும் லிங்கோற்பவ காலம் நீங்கும் வரையுமாயினும் நித்திரையொழித்து சிவ தரிசனம் செய்து இஷ்ட சித்திகளைப் பெற வேண்டியது இந்து மக்களின் கடமையாகும். இன்றைய நிலையில் மக்கள் அல்லற்பட்டு அலைந்து கொண்டேயிருக்கிறார்கள். இந்த அவலத்தை அகற்றி சுபீட்ச வாழ்வை தரவல்லவன் இறைவன், அவனை அல்லும் பகலும், அனவரதமும் தொழுது வேண்டினால் கிடையாததொன்றில்லை. இறைவன் மீது பக்தி கொள்ள அவன் கருணை புரிவான்.

"அயனோடு அன்று அரியும்
அடியும் முடி காண்பரிய பயனே எம்பரனே
பரமாய பரஞ்சுடரே கயமாருஞ் சடையாய்
கடவூர்த் திருவீரட்டத்துள் அயனே என் அமுதே
எனக்காரர் துணை நீயலதே"

— சுந்தரர்

தினகரன்
14-02-99

---

பண்ணினேர்மொழியாள் பங்க நீயல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமேயாண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமேயுடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின் மேலடியேன் வாழ்கியேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே.

# மரணமில்லாப் பெருவாழ்வுக்கு வழிகாட்டும் பிரதோஷ விரதம்

''பிரதோஷ விரதத்தை முறைப்படி அனுட்டித்து பிரதோஷ காலத்தில் அன்புடன் சிவனை வழிபடுபவர்கள் இம்மை, மறுமையில் எல்லாவித நலன்களையும் பெறுவர்''

மரணத்துக்கு நடுவில் நாம் உயிரோடு வாழ்கிறோம் என்பது ஒரு மகாவாக்கியம். பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் எல்லாம் அழிந்து போயின. இறுமாப்புடன் தலைநிமிர்ந்து ''நான் மகா வீரன், நான் சக்கரவர்த்தி'' என்று ஆணவம் பேசியவர்கள் பிண மாகி விட்டனர்.

மரணத்திற்கு முன்னே மனிதன் வேட்டையாடப்பட்ட விலங்கு களின் பரிதாப நிலைக்கு வந்து விடுகிறான். இந்த மரண பயத்தை வெல்வது எப்படிச் சாத்தியமாகும். இந்து சமய நெறியில் இறைவனி டம் பக்தியுடன் சமய அனுட்டானம், ஆசாரம், ஆலயவழிபாடு புரிந்து மனத்தை தூய்மை ஆக்குவதே பரிபூரண பக்தியாகும். சொல்லப்பட்ட வழிமுறையில் விரதங்களை கடைப்பிடிப்பதாலும் உண்மை நிலையை அடைந்து பேரானந்தப் பெருவாழ்வு பெறலாம். சிவ விரதங்களுள் பிரதோஷ விரதம் மிகவும் சிறப்பும் மகிமையும் வாய்ந்ததாகும்.

பிரதோஷ விரதத்தை முறைப்படி கைக்கொள்பவர்கள் சர்வ பாவமும் விலகி புண்ணியம் சேரப்பெற்று மரணவேதனை என்னும் கொடிய துன்பத்திலிருந்தும் நீங்கப்பெறுவர். அத்துடன் சர்வ சௌபாக்கியங்களையும் அடைவர். கல்வி, செல்வம் முதலிய நலன் களுண்டாவதுடன் கடன், வறுமை, வியாதி, பயம், மனக்கவலை முதலியன நீங்கப்பெறுவர்.

## பிரதோஷ வரலாறு

இந்திராதிதேவர்கள் திருப்பாற்கடலை கடைய முயன்று மந்திர கிரியை மத்தாகவும் வாசுகியை தாம்புக் கயிறாகவும் அமைத்தார் கள். அசுரர்கள் தலைப்புறமாகவும், தேவர்கள் வாற்புறமாகவும் நின்று கடையலானார்கள். இதனால் வாசுகி கக்கிய ஆலமும் கட லில் தோன்றிய ஆலமும் ஒன்று சேர்ந்து ஆலாலம் என்கிற

கொடிய நஞ்சு தோன்றி விண்ணவரை விரட்டியது. வானவர்கள் அஞ்சி திருக்கைலாயஞ் சென்று அரனாரிடம் அடைக்கலம் புகுந் தார்கள்.

அரனார் அருகே தொண்டராக நின்ற சுந்தரரிடம் ஆலா லத்தை எடுத்து வரும்படி பணித்தருளினார். அவர் சென்று விடத்தை நாவற்பழம் வடிவில் திரட்டிப் பரமனிடம் கொடுத்தார். கருணாமூர்த்தியான எம்பெருமானும் நந்திதேவரின் கொம்பின் நடு வில் தோன்றி அக்கொடிய விடத்தை அடியவர்கள் உய்ய அமுதம் போல் உண்டு அருளினார். எம்பிராட்டியின் வேண்டுதலால் விடத்தை உண்ணாமலும், உமிழாமலும் கண்டத்தில் தரித்தருளி னார். எம்பெருமானுடைய கண்டம் கரியதாயிற்று. அதனால் திரு நீலகண்டர், மணிகண்டர் என்று பேர் பெற்றார்.

தேவர்களை மகிழ்விக்கத் திருவுளம் கொண்ட பரமன் அம் பிகை காணும்படி நந்திதேவரின் கொம்புகளுக்கிடையே நின்று ஆனந் தத் தாண்டவம் ஆடியருளினார். அதனால் தான் பிரதோஷ நாளன்று நந்திதேவரின் கொம்புகளுக்கிடையே பார்த்து லிங்கமூர்த்தியை தரிசிக்கும் முறை பின்பற்றப்படுகிறது. அவர் ஆனந்தத் தாண்டவம் ஆடிய நேரமே பிரதோஷ வேளையாகும்.

## பிரதோஷ காலம்

பொதுவாகப் பிரதோஷகாலம் என்றால் பகல் முடியும் நேரம் தொடங்கி இரவுக்கு அடையாளமாக வானில் சந்திரனும் நட்சத்தி ரங்களும் தோன்றும் நேரம் வரை என்று கூறுவர். இதை மிகவும் துல்லியமாக கணக்கிட்டு மாலை 5.15 மணிக்குமேல் 6.30 மணிக் குள் என்று பிரதோஷகாலத்தை சாஸ்திர அறிஞர்கள் குறிப்பிட்டுள் ளனர். ஒவ்வொரு மாதமும் அமாவாசையில் இருந்து 13 நாளும் திரயோதஷி திதியாகும். அன்றுதான் பிரதோஷ நாள். ஆகவே மாதத் தில் இரண்டு பிரதோஷ நாள்கள் வருகின்றன.

சிறப்பாக சொல்வதானால் இது சுக்கிலபட்சம், கிருஸ்ணபட்சம் என்னும் இரண்டு பட்சத்தும் வருகின்ற திரயோதசி திதியில் சூரி யாஸ்தமனத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகையுமாய் உள்ள காலமாகிய பிரதோஷ காலத்திலே சிவபெருமானைக் குறித்து அநுட் டிக்கும் விரதமாகும். இவ்விரதத்தை ஐப்பசி, கார்த்திகை, சித்திரை, வைகாசி என்னும் நான்கு மாதங்களுள் ஒன்றில் சனிப்பிரதோஷம் முதலாகத் தொடங்கி அநுட்டித்தல் வேண்டும்.

## வழிபடும் முறை

மற்றைய நாள்களில் ஆலயத்தில் மூன்று முறைகள் வலம் வரும் வழக்கத்திற்கு மாறாக பிரதோஷ காலத்தில் சோமசூக்தப் பிரதட்சணம் செய்தல் வேண்டும். இடபதேவரை முதலில் வணங்கி அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரைத் தரிசித்து அங்கு நின்றும் வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து கோமுகையைக் கடவாது முன் சென்ற வழியே திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் திரும்பி இடபதேவரைத் தரிசியாது இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து, அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடு கூட ஹர ஹர என்று சொல்லி சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து வணங்கல் வேண்டும். இது ஒரு பிரதட்சணமாகும், இதே போல் மூன்று முறை பிரதட்சணம் செய்தல் வேண்டும். சனிப்பிரதோஷ தரிசனத்தில் தனிச்சிறப்பும் பலனும் உண்டு.

பிரதோஷ நாள்களில், பகலில் போசனஞ் செய்யாது சூரியன் அஸ்தமிக்க நான்கு நாழிகை இருக்கும் அளவில் ஸ்நானஞ் செய்து சிவபூசை பண்ணித் திருக்கோயிலிற் சென்று சிவபெருமானுக்கும் நந்திதேவருக்கும் நடைபெறும் அபிஷேகம், பூசை வழிபாடு இயற்றி நந்திதேவரின் கொம்புகளுக்கு இடையே எம் பெருமானை தரிசித்தல் வேண்டும். நந்தி தேவருக்கு அறுகம்புல் மாலை அணிவித்து மாவினால் அகல் செய்து தூய்மையான பசு நெய் விட்டு விளக்கு எரித்தல் வேண்டும். காரரிசியில் வெல்லம் கலந்து நந்தி தேவருக்குப் படைத்தல் வேண்டும்.

## கிடைக்கும் பெறுபேறுகள்

பின்னர் சிவபெருமான் உமாதேவியாருடன் பிரதோஷ நாயகராய் பிரதோஷ காலத்தில் (மணி 5.45 முதல் 6.30 வரை) ஆலய வலம் வரும் பொழுது கண்டு தரிசித்தல் மிகப் பெரிய புண்ணியமாகும். எப்போதும் இறைவனையே சிந்தை செய்து "சிவாயநம" என்ற ஐந்தெழுத்தை ஜெபம் செய்வதுடன் சிவபுராணத்தை சொல்லிக் கொண்டிருத்தல் மிகவும் நல்லது. பிரதோஷ காலம் கழிந்த பின் சிவனடியாரோடு பாரணம் செய்தல் வேண்டும். பிரதோஷ காலத்தில் போசனம், சயனம், ஸ்நானம், விஷ்ணு தரிசனம், எண்ணெய் தேய்த்தல், வாகனமேறல், மந்திரசெபம், நூல் படித்தல் என்னும் இவ்வெட்டுஞ் செய்யலாகாது.

பிரதோஷ காலத்தில் சிவபூசை காண்பவர்கள் எல்லாப் பலன்களும் கிடைக்கப் பெற்று இம்மை மறுமையில் எல்லாவித நலன்களையும் பெறுவார்கள். இப்புண்ணிய விரதத்தை தொடர்ந்து 12 அல்லது 24 வருடங்கள் அனுட்டித்தால் பிறவாப் பெருவாழ்வு பெற்று முத்தியின்பம் பெறுவார்கள். பதினொரு பிரதோஷம் பார்ப்பதனால் ஒரு மகா கும்பாபிஷேகம் பார்த்த பலன் கிடைக்கும். நூற்றியிருபது பிரதோஷம் பார்ப்பவர்களுக்கு மறுபிறவி கிடையாது.

வீரகேசரி 03-06-98

# திருக்கார்த்திகைத் திருநாள்

ஒளி ஏற்பட்டால்தான் இருள் அகலும். இருள் அகன்றால்தான் பொருள் கண்களுக்குப் புலப்படும். இருள் அகல ஞான ஒளி உண்டாகும். தெய்வ வழிபாட்டு முறையில் ஜோதி வடிவத்திலான இறைவனையே முழுமுதற் கடவுளாக வழிபடும் முறை பண்டு தொட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. இறைவன் ஜோதிமயமானவர் என்று ஆகமசாஸ்திரங்கள், புராணங்கள் விதந்து கூறுகின்றன. இறைவன் ஒளி வடிவாக இருக்கிறார் என்பதை உணர்த்த ''ஜோதியே சுடரே'' என்பார் மணிவாசகர். 'அருட்பெருஞ்ஜோதி' என்பார் இராமலிங்க சுவாமிகள். 'அருள் விளக்கே, அருட்சுடரே, அருட் ஜோதிசிவமே' என்றும் போற்றுவார் வடலூர் வள்ளல்,

''இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமசிவாயவே''

என்பார் திருநாவுக்கரச நாயனார்.

கார்த்திகை தீப வழிபாட்டிற்கென்றே ஒரு ஆலயத்தை ஆன்றோர் குறிப்பிட்டு உள்ளனர். திருவண்ணாமலையே அப்பதியாகும். தென்நாட்டில் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றின் தலங்களாக பஞ்ச தலங்கள் உள்ளன. இதில் அக்னியின் தலமாக விளங்குவது திருவண்ணாமலை. மலையே சிவரூபம் என்று வர்ணிக்கப்படுகிறது. இம் மலையையே தேஜோலிங்கம் என்றும் அழைக்கிறார்கள். திருமாலும் பிரமாவும் சுழற் பிழம்பாகத் தோன்றிய சிவபெருமானின் அடிமுடியைக் கண்டறிய முயன்று தோல்வியுற்ற தலம் இதுவாகும். எல்லாம் வல்ல சிவன் ஒளி வடிவாக இருக்கிறார் என்பதை உணர்ந்த சோதியே, சுடரே, சூழ் ஒளி விளக்கே என்று அடியார்கள் பாடியிருக்கிறார்கள். திருவண்ணாமலையில் பஞ்ச மூர்த்திகள் வெளிவந்து மலையைப் பார்த்து நின்றதும், கற்பூர ஆரத்தி எடுக்கப்படும். அப்போது அண்ணாமலையின் உச்சியிலுள்ள உயர்ந்த கொப்பரையிலிருந்து சுடர் எழும். இந்த அற்புதமான காட்சியை திருஞானசம்பந்தர் நேரில் கண்டிருக்கிறார். அதை அவர்,

''உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழமண் ஆர்ந்தன அருவித்திரள்
மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை
வழுவாவண்ணம் அறுமே''

என்று உள்ளம் உருகிப் பாடியுள்ளார்.

கார்த்திகை தீபத் திருநாளன்று ஆலயங்களில் சொக்கப் பானை கொளுத்துகிறார்கள். சிவபெருமான் ஜோதி வடிவமாக எழுந்தருளிய நாள் கார்த்திகை. ஆகவே அந்த ஜோதியை நினைவுபடுத்தவே சொக்கப்பானை கொளுத்தப்படுகிறது. பனை மரத்தை வெட்டி நடுவில் வைத்து சுற்றிலும் பனை மடலை வெட்டிக் கட்டி வைத்து கொளுத்துவதினால் 'சொக்கப்பனை' என்ற பெயர் வந்திருக்கலாம். தீயானது தன்னை அடைந்தவர் அழுக்கைப் போக்கித் தன் மயமாக்கும். இறைவன் ஆன்மாக்களின் ஆணவ இருளை அகற்றி தன்மயமாக்குவான். அக்னி அருவமாகவும் உருவமாகவும் விளங்குவது போல இறைவனும் அருவமாகவும் உருவமாகவும் மிளிர்கின்றான். அக்னி ஒன்றே பல தீபங்களாக விளங்குவது போல் சிவம் ஒன்றே பல மூர்த்தங்களாக விளங்கும். சிவசோதியை யோக வழியில் காணமுடியாத மக்கள் சரியைத் தொண்டுகளால் முயலவேண்டும் என்று சிவாகமங்கள் கூறுகின்றன. சரியைத் தொண்டுகளில் ஒன்று திருவிளக்கிடலாகும். கலியநாயனார், நமிநந்தியடிகள், புல்லநாயனார் போன்ற அடியவர்கள் திருவிளக்குத் தொண்டால் முக்திப் பேறு பெற்றவர்கள்.

சோதி வழிபாட்டிற்கும் திருவிளக்கு வழிபாட்டிற்குமிடையில் வேற்றுமை அதிகம் இல்லை. திருவிளக்கு முழுவதும் வழிபாட்டில் ஈடுபடுத்தப்படுவது திருவிளக்கு வழிபாடு. அந்த விளக்கின் சுடரை மட்டும் வழிபடுவது சோதி வழிபாடு. திருவிளக்கு வழிபாட்டையும் அதன் பயன்களையும் முதன்முதல் விளக்கமாக கூறியவர் திருமூலர்.

''விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே.

விளக்கின் சுடர்களை ஏற்றுங்கள். இருளற்ற வெளியை விளக்கமாக அறிந்து கொள்ளுங்கள். விளக்கின் முன்னே உடல், உள

வேதனைகள் அனைத்தும் அறவே ஒழிந்து விடும், அறிவுத் தெளிவு வுடையவர்கள். சுடர் இருளகற்றும், மற்றொரு சுடர் எரியத் துணை புரியும். அது போல விளங்கிய அறிவுடையவர்கள் மற்றவர் களது அறியாமை இருளை அகற்றுவர். தம்மைப் போல மற்றவர் களும் அறிவுத் தெளிவு பெறத் துணை செய்வர்.

குத்து விளக்கில் ஐந்து முகங்கள் உண்டு. இந்த ஐந்தையும் ஏற்றி வைத்தால் லட்சுமிகரமாக இருப்பதைக் காணலாம். இந்த ஐந்து முகங்கள் மகளிரிடம் இருக்க வேண்டிய அன்பு, மனஉறுதி, நிதானம், சமயோசித புத்தி, சகிப்புத் தன்மை ஆகிய ஐந்து குணங் களைக் காட்டுவதாகும். அத்துடன் ஐந்து முகச் சுடர் அளவற்ற பலன்களை அள்ளித் தரும். பூசை அறைகளுக்கு ஒரு தனி அழகை யும் பெருமையையும் உண்டாக்கும். திருவிளக்கின் சுடர் வடக்கு அல்லது கிழக்கு நோக்கி எரிவது உத்தமம். தீபம் ஏற்றுவதற்கு நெய், இலுப்பெண்ணெய் என்பவை மிகச் சிறந்ததாகும்.

''அருள் விளக்கே அருட் சுடரே அருட் சோதி சிவமே
அருளமுதே அருள் நிறைவே
அருள் வடிவப் பொருளே
இருள் கடிந்தென்
உளமுழுதும் இடம் கொண்ட பதியே
என்னறிவே என்னுயிரே எனக்கினிய உறவே''

என்று அருட் பெரும் ஜோதி வள்ளலார் ஒளியைச் சிவமாக வணங்குகிறார்.

''ஞானச் சுடர் விளக்காய் நின்றவன், விறகிற் தீயினன் பாலிற் படுநெய் போல், மறைய நின்றுளான் மாமணிச் சோதியானை போற்றி வணங்குவோம்.

தினகரன் 29-11-1998

---

பஞ்சின்மெல்லடியாள் பங்கநீயல்லால்
　　பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே யாண்டாய் சிவபுரத்தரசே
　　திருப்பெருந் துறையுறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீயளித்த
　　அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேனிங்கு வாழ்கிலேன்கண்டாய்
　　வருக என்றருள்புரியாயே.

## போற்றி போற்றி சிவ சிவ போற்றி......

# சிவ நாமம்

அம்பலத் தரசே அருமருந்தே
ஆனந்தத்தேனே அருள் விருந்தே
பொதுநடத் தரசே புண்ணியனே
புலவரெல்லாம் புகழ் கண்ணியனே
சிவ சிவ சிவ சிவ சின்மயதேஜா
சிவ சுந்தர குஞ்சித நடராஜா
நடராசா நடராசா நிரத்தன சுந்தர நடராசா
நடராசா நடராசா ஒருகால் நிர்த்த நடராசா
நடராசா நடராசா ஆனந்த தாண்டவ நடராசா.
நடராசா நடராசா கனகசபேசா நடராசா
சிவராசா சிவராசா சிவகாமிப்பிரியர் நடராசா
நடராசா எனல்லார்க்கும் நல்லவனே
நல்லதெல்லாம் செய்ய வல்லவனே
நடராசா பாட்டே நறும் பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும் பாட்டு
தில்லைக் கண்டார் தேவர்களே
செய்வார் அவர் பணி மூவர்களே
அரிபிரமாதியர் தேடிய நாதா
அரகர சிவசிவ ஆடிய பாதா
சாம்ப சதாசிவ சங்கர நடனம்
பாம்பும் புலியும் பார்த்திடு நடனம்
படன விவேக பரம்பர வேதா
நடன சபேசா சிதம்பர நாதா
கருணா நிதியே சபாபதியே
கதிமா நிதியே பசுபதியே
இக்கரை கடந்திடில் அக்கரையே
இனிப்பது சிதம்பர சர்க்கரையே
என்னுயிருடம் பொடு சிற்றமுதே
இருப்பது நடராசப் புத்தமுதே
ஐயர் திருச்சபை ஆடகமே
ஆடுதலானந்த நாடகமே
அம்பலவா சிவ மகாதேவர்
அடியனை ஆட்கொள்ள வா வாவா
ஆனந்த நாடகங் கண்டோமே
பரமானந்த மோனகங் கொண்டோமே
சங்கர சிவ சிவ மாதேவா
எங்களை ஆட்கொள வா வா வா